கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை

மாதம் இருமுறை.

11-11-1973

40 காசு



வாழ்வே ஒரு பாச உலகம்



'க்ளிக்' அடித்துவைப்பீர்...நிரந்தரம்


எப்போதுமே உங்கள் கையோடிருக்கட்டும் தப்பாத் துணையான க்ளிக் III.
மறைந்தோடும் வாழ்வின் மணியான கணங்களை நிரந்தரமாக்கிக்
காப்பீர் நினைவுமுகம் கண்முன் நிற்பதற்கே.

'இலக்கு வைத்ததும் சடக்' என எடுக்கவே ஆக்பா க்ளிக். காரியத் தகுதி
வாய்ந்தது. உண்மை தவறாதது.
கையாள எளிது. சிக்கனமிக்கது.

- 120 பிலிம் ரோல் ஒவ்வொன்றுக்கும் பெரிது பெரிதாக (6 x 6 செமீ.) படங்களைப் பெறுவீர்கள்.
- சிறப்பானதோர் தயார்த் தோலுறை. போர்ட்ரெய்ட் லென்ஸ், ப்ளாஷ்கன் ஆகியவை மேற்கொண்டு தனிவிலைக்குக் கிடைக்கும்.

தெள்ளத் தெளிவான பிரிண்டுகளுக்கும்,
என்லார்ஜ்மெண்டுகளுக்கும் கண்டிப்புடன் கோருவீர்
ஆக்பா-கேவார்ட் போட்டோத் தாள்களை.
அனுமதிபெற்ற எல்லா ஆக்பா-கேவார்ட் விற்பனையாளர்களிடமும்
கிடைக்கும்.
ஆக்பா-கேவார்ட் AG லீவர்குஸன் அவர்களின் கூட்டுறவோடு
இவற்றைத் தயாரிப்போர்: தி நியூ இந்தியா இண்டஸ்ட்ரீஸ் லிட்.


விலை
ரூ. 56.25
(எக்ஸைஸ் தீர்வை உள்ளிட்டது. இதர வரிகள் தனி)



ஏகபோக விநியோகஸ்தர்கள்:
ஆக்பா-கேவார்ட் இந்தியா லிமிடெட்
பம்பாய் • நியூ டெல்லி • கல்கத்தா • சென்னை
® புகைப்பட சாதனங்களின் தயாரிப்பாளர்களான
ஆக்பா-கேவார்ட், ஆன்ட்வெர்ப்/லீவர்குஸன்
ஆகியோரின் ரிஜிஸ்டர்டு டிரேட் மார்க்.

ஆக்பா க்ளிக்—
இந்தியாவின் உன்னதப்
புகழ்பெற்ற காமிரா.

Simoes/AG/17 b/Tam



கோகுலம்

மலர் 2 : இதழ் 16

நவம்பர் 11, 1973

பிரமாதீச, ஐப்பசி 26

உயிர்களிடத்து அன்பு
வேண்டும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும்

— பாரதியார்




அட்டைப்படச் சிறுவன் :

வேட்டு வெடிச்சண்டை வேண்டாம்
கேட்டுக் கொள்ளுங்கோ !

போட்டு வச்சேன் சல்யூட் ஒன்று
போரை நிறுத்துங்கோ !

வண்ணப்படம் : ரவீந்திர பல்லா



சந்தா விவரம் :

உள் நாடு :

ஒரு வருடம் ... ரூ. 10—00

ஆறு மாதம் ... ரூ. 5—00

இலங்கை :

ஆண்டுச் சந்தா : ரூ. 15—00
(இலங்கை நாணயப்படி)

இதர நாடுகள் :

ஆண்டுச் சந்தா ரூ. 25—00

★

மானேஜர், கோகுலம்
கல்கிப் பூங்கா, சென்னை - 600031



பிள்ளையார் பெருமை

திருமுருக கிருபானந்த வாரியார்

அச்சது பொடிசெய்த அதிதீரன்!

விநாயகப் பெருமானை நினைத்து வழிபடாமல் ஒரு கருமம் தொடங்கினால் அது நிறைவேறாது.

ஒரு சமயம் கமலாட்சன் வித்யுன்மாலி • தாரகாட்சன் என்று மூன்று அசுர வேந்தர்கள் எண்ணில்லாத வரம் பெற்று இறுமாந்திருந்தார்கள். இவர்களுக்கு இரும்பு வெள்ளி பொன்ற மூன்று உலோகங்களால்' கோட்டை அமைந்திருந்தது. அந்த நகரத்துடன் பறந்து வந்து முனிவர்களுக்கும், தேவர்களுக்கும் இடுக்கண் செய்தார்கள். இந்திராதி இமையவர்கள் எல்லையில்லாத தொல்லை அடைந்தார்கள்.

மாலயனாதி வானவர்கள் திரண்டு, திருக்கயிலாய மலை சென்றார்கள். திருநந்தி தேவருடைய உத்தரவு பெற்றுத் திருக்கோயிலுக்குள் சென்று கோடி சூரியப் பிரகாசமாக விளங்கும் பரமேசுரனைக் கண்டு வணங்கி நின்றார்கள்.

''தேவ தேவா! மகாதேவா! திரிபுரத்து அவுணர்களால் நாங்கள் பல காலமாக அல்லல் அடைகின்றோம். அவர்களை அழித்து அருள் புரிய வேண்டும்'' என்று கூறி முறையிட்டார்கள்.

சிவபெருமான் தண்ணருள் புரிந்து 'திரிபுராதிகளை நாம் அழித்தருளுவோம்!' என்று கூறிக் கருணை புரிந்தார்.

தேவர்கள் உள்ளம் மகிழ்ந்து சிவமூர்த்திக்குத் தேர் அமைக்க வேண்டும் என்று எண்ணினார்கள். விநாயகப் பெருமானை வணங்கி இக்கருமத்தில் ஈடுபட வேண்டும். அமரர்கள் ஆனை முகப் பெருமானை நினையாமல் தேர் அமைக்கலானார்கள்.

சூரியனும் சந்திரனும் தேர் உருளைகளாகவும், அதல, விதல, சுதல, ரசாதல, மகாதல, தராதல, பாதால என்ற கீழ் ஏழ் உலகங்களும் தேரின் கீழ்த் தட்டுக்களாகவும், பூலோகம், புவர் லோகம், சுவலோகம், சனலோகம், மகாலோகம், தபோலோகம், சத்தியலோகம் என்ற ஏழு உலகங்களும் மேல் தட்டுக்களாகவும், அஷ்டகுல மலைகள் விதானமாகவும், மேகங்கள் தேர்ச் சீலைகளாகவும், அஷ்ட திக் பாலகர்கள் எட்டுத் தூண்களாகவும், சக்கரவாளகிரி அச்சாகவும், முப்பத்து முக்கோடி தேவர்கள் தேர்ப் பதுமைகளாகவும், நான்கு வேதங்கள் குதிரைகளாகவும், மேரு கிரி வில்லாகவும், வாசுகி நாணாகவும், திருமால் பாணமாகவும், அக்கினி அதன் வாயாகவும், வாயு அதன் குதையாகவும், பிரமதேவன் தேர்ப் பாகனாகவும், இவ்வாறு மகத்தானதொரு தேரை அமைத்தார்கள்.

சிவபெருமானிடம் சென்று ''ஐயனே! தேர் ஆயத்தமாக உள்ளது. வந்து தேரூர்ந்து திரிபுரத்தை அழித்தருளும்'' என்று வேண்டிக் கொண்டார்கள்.

சிவமூர்த்தி அத்தேரின்மீது ஆரோகணித்தார்: விநாயகப் பெருமானை நினையாது தேர் அமைத்த காரணத்தால் விநாயகப் பெருமான் அங்கு வந்து தேரின் அச்சை மளமளவென்று முறித்துப் பொடி செய்தருளினார்.

உடனே தேவர்கள் தமது பிழையை உணர்ந்து, விநாயகப் பெருமானுடைய திருவுருவை அமைத்து, அபிஷேகம் புரிந்து, அட்சதை, நறுமலர்கள் சாத்தி, சிரசில் குட்டிக் கொண்டு, கண்ணீர் ததும்பி, மொழிகுழறித் துதி செய்தனர்.

சங்கரன் மகனே போற்றி
சங்கடம் தீர்ப்பாய் போற்றி

திங்களங் கொழுந்து வேய்ந்த
செஞ்சடச் மணியே போற்றி

துங்கதன் மறை துதிக்கும்
துதிக்கைவா ரணமே போற்றி

ஐங்கரத் தண்ணல் போற்றி
ஆனைமா முகனே போற்றி



என்று துதி செய்தார்கள். விநாயகப் பெருமான் திருவருள் புரிந்தார். பழைய படி அச்சுப் பொருந்தியது.

"நாம் எல்லோரும் துணை செய்வதால்தானே சிவபெருமான் திரிபுரத்தை அழிக்கப் போகின்றார்" என்று எண்ணித் தருக்குற்றார்கள் தேவர்கள்.

சிவபெருமான் எண்ணுகின்ற எண்ணத்துள் இருப்பவரல்லவா? இமையவர்களின் எண்ணத்தை உணர்ந்தார்.

"நமக்குத் தேர் வேண்டுமா? பாணம் வேண்டுமா?" என்று சிந்தித்துப் புன்னகை புரிந்தருளினார்.

சிரிப்பிலிருந்து ஒரு நெருப்புப் பொறி பறந்தது. திரிபுரம் எரிந்தது.

ஆதலால் விநாயகரைக் காதலால் வணங்கி எந்தக் கருமத்தையும் தொடங்க வேண்டும்.

விக்கினங்களை நீக்குவதாலேயே விக்கினேச்சுரர், விக்கினராஜர் என்ற திருநாமங்களைப் பெற்றிருக்கிறார் பிள்ளையார்.

"முப்புர மெரிசெய்த
அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த
அதிதீரா

—திருப்புகழ்

கனவில் வந்த குழந்தை



துள்ளி ஓடும் அருவி சூழ்ந்த மலைச்சரிவிலே
சுகந்த முள்ள பூமலரும் மாலைவேளையில்
கள்ள மற்ற சிறுவர் பலரும் ஒன்று கூடியே
களித்து நிற்கும் காட்சியினைக் கண்டு மகிழ்ந்தேன்.


சீனப்பையன், ஜப்பான் பெண்டிர், செக்கோஸ்லோவேகியா
சிறுமி யோடே அமெரிக்கனும் பிரெஞ்சுப் பையனும்
ஈனம் என்றே ஒன்றும் இன்றி நீக்கி ரோவரும்
இந்தியரும் எஸ்கிமோவும் ஒன்றாய் வந்தனர்.

வான வில்லில் ஏறி இங்கே வந்து சேர்ந்தாரோ?
வாயுமீது நீந்தி இங்கே வந்து சேர்ந்தாரோ?
கான கத்துச் சோலை யெல்லாம் எங்கெங் கிருந்தோ
கண் இமைக்கும் முன்னர் நூறு நூறாய் வந்தனர்.

அரிய இந்தக் காட்சி காண எழுந்ததே நிலா
அதன் ஒளியில் சூழ்நிலை ஓர் புதுமை பெற்றதே.
உரிமை யோடு சிறுவர் எல்லாம் அச்சம் இன்றியே
ஓடி விளை யாடினர் அம் மலைச் சரிவிலே

ஆடிப் பாடிக் களித்த பின்னர் களைத்த போதிலே
ஆனை மீதோர் சிறுவன் வந்தான் குழலை ஊதியே

தம்பி சீனிவாசன்






கூடி நின்றோர் சிறுவர் எல்லாம் ஆனையைச் சூழ்ந்தே.
குழலின் குரலால் உள்ளம் உடலில் சோர்வு நீங்கவே.

குழலின் இனிமை கூற வெறும் சொல்லால் ஆகுமோ?
குற்ற மற்ற கீதம் அது; குழந்தைகள் பேசும்
மழலை போல மனதில் இன்பம் ஊட்டிடும் கீதம்;
மனதை என்றும் விட்டகலா மந்திர கீதம்.

ஆனை மீது நின்ற சிறுவன் குழலை ஊதிட,
ஆடிப் பாடிக் களித்து நின்றோர் சிறுவர் சிறுமியர்
தேனை உண்ணும் வண்டெனவே யானையைச் சுற்றிச்
சிரித்தார், அந்தச் சிரிப்பைச் சோலை எதிரொலித்ததே!

புத்தன் ஏசு காந்தி சொன்ன சொல்லின் சக்தியும்
புகழ் மிகுந்த முன்னோர் செய்த செய்கைச் சக்தியும்
எத்தனையோ நல்லோர் எண்ணும் எண்ணச் சக்தியும்
இனிய கீதம் சிறுவருள்ளே புகுத்தி விட்டதே!

கூடி நின்ற சிறுவர் முகமும் காந்தி பெற்றதே
கூத்தும் களியும் விடியு மட்டும் நடத்திய பின்னர்
ஓடி விட்டார் எங்கேயோ நான் இன்றும் அறிந்திலேன்—
உள்ளம் ஊக்கும் கீதம் மட்டும் இன்றும் கேட்கிறேன்.




இந்த இதழில் மோஷே தயான்...

—தாணு



அடுத்த இதழில் யார்?



தந்தையும் மகளும்

"நான் எங்கள் அப்பா — அம்மாவுக்குச் செல்லக் குழந்தை. எங்கள் அப்பாகிட்டே நிறையப் பணம் இருந்தது. அரச குமாரனைப் போல் என்னை ஆடம்பரமாகவும் வெகு சொகுசாகவும் வளர்த்து வந்தார். என்னைக் கவனித்துக் கொள்ள எத்தனை ஆட்கள் என்கிறீர்கள். நான் விளையாடப் போனாலும் பின்னோடு யாராவது ஆள் வந்து விடுவான். எனக்கு அது சற்றும் பிடிக்காது.

"குதிரை சவாரி செய்வதில் எனக்கு நிரம்ப இஷ்டம். அப்பொழுது எனக்குப் பத்துப் பதினொரு வயதுதான் இருக்கும். அப்பா ஒரு குதிரையையும் குதிரைக் காசாரியையும் என்னோடு அனுப்பி வைத்தார். அதோடு 'குழந்தை ஜாக்கிரதை!' என்றும் உத்தரவு போட்டு வைத்தார். அதனால் அவன் குதிரையைப் பெரு நடையாக நடக்க விடுவானே ஒழிய வேகமாக ஓடவிட மாட்டான். எனக்கோ அது இறக்கை கட்டிக் கொண்டு பறக்க வேண்டும் என்று ஆசை. ஒரு நாள் அவனை மெதுவாகத் 'தாஜா'ப் பண்ணிக் குதிரையின் கடிவாளத்தை வாங்கிக் கொண்டேன்.

"அப்புறம் குதிகாலால் குதிரையை உந்தினேன். அப்பொழுது எனக்குக் குதிரைப் பயிற்சி அவ்வளவாகக் கிடையாது. எனவே, ஓடுகிற குதிரையை என்னால் அடக்க முடியவில்லை. என்னைக் கீழே தள்ளிவிட்டுத் திரும்பிப் பாராமல் ஓடிய அது அப்பாவிடம் போய்த்தான் நின்றது. வெறும் குதிரையைப் பார்த்து அப்பா பயந்து விட்டார். எனக்கு என்ன ஆபத்தோ என்று எண்ணிக் குதிரைக் காசாரியைப் பிடித்துத் திட்ட ஆரம்பித்து விட்டார்.

"அதற்குள் நான் என்ன செய்தேன், தெரியுமா? குதிரை வேகத்தில் விழுந்து அடித்துக் கொண்டு ஓடிப் போய் அப்பாவின் எதிரில் நின்றேன். மூச்சு வாங்க, 'அப்பா! இந்தக் குதிரை என்னைக் கீழே தள்ளிவிட்டு ஓடி வந்துவிட்டது. நானும் அதே வேகத்தில் அதைப் பிடிக்க ஓடி வந்திருக்கிறேன். இதை நான் அடக்கவில்லை என்றால், என் பெயரை மாற்றி

வையுங்கள்!' என்றேன். என் துணிச்சலைக் கண்டு அப்பா அகமகிழ்ந்து போனார்.''

இப்படிச் சீரும் சிறப்புமாகச் செல்வத்தில் வளர்ந்தவர் சுதந்திர பாரதத்தின் முதல் பிரதமர் **ஜவாஹர்லால் நேரு**. அவர் ஆரம்பக் கல்வி பயின்றது அயல்நாட்டு ஹேரோ பள்ளியில். 'தன் கையே தனக்கு உதவி' என்ற பழமொழியையும், 'ஒழுக்கம் விழுப்பம் தரும்' என்ற குறளையும் வாழ்க்கையில் செயல்படுத்தி வளம் காணக் கற்றுத் தந்த பள்ளி அது.

ஒரு நாள் ஜவாஹர்லால் தம் பூட்ஸுக்குத் தாமே பாலிஷ் போட்டுக் கொண்டிருந்தார். அவரைப் பார்க்க வந்த அவரது தந்தை மோதிலால் நேரு முகம் கடுத்தார். ''ஏண்டா! இந்த வேலைகளை யெல்லாம் நீ செய்கிறாய்? ஒரு வேலைக்காரனை வைத்துக் கொள்ளக் கூடாது?'' என்று கேட்டார். அதனால் மறுநாள் ஜவாஹர் தமக்கு ஒரு வேலையாள் தேவை என்று உபாத்தியாயரிடம் கூறினார். ''இந்தப் பள்ளிகளின் விதிமுறைகள் உனக்குத் தெரியாதா? இப்படிக் கேட்க உனக்கு எப்படித் துணிச்சல் வந்தது?'' என்று கேட்டு மற்ற மாணவர்களின் பூட்ஸுகளுக்கும் ஜவாஹரையே பாலிஷ் போடுமாறு தண்டனை விதித்துவிட்டார் அவர்.

மோதிலால் வந்து பார்த்தபொழுது ஜவாஹரின் எதிரே பூட்ஸ்கள் மலையாகக் குவிந்திருந்தன. கடமையே கண்ணாக ஜவாஹர்லால் பாலிஷ் போட்டுக் கொண்டிருந்தார்.

''என்னடா காரியம் இது?'' என்று தந்தை அதட்டினார். பள்ளியின் விதிமுறைகளை ஜவாஹர்லால் விளக்கியபின்தான் மோதிலாலுக்கு விவரம் தெரிய வந்தது.

ஜவாஹர்லாலுக்குப் பூ என்றால் மிகவும் பிடிக்கும். அதுவும் ரோஜாப் பூ என்றால் உயிர். அதைக் காட்டிலும் பூ உள்ளம் படைத்த குழந்தைகளைக் கண்டுவிட்டால் தாமும் குழந்தைகளோடு குழந்தையாகிவிடுவார். அரிய பெரிய காரியங்களைச் சாதிக்க இந்தக் குழந்தை உள்ளமே அவருக்குத் துணை நின்றது.

அவருக்கு ஒரே மகள். இந்திரா பிரியதர்சினி என்று பெயர் சூட்டிப் பெற்றோர் மகிழ்ந்தனர்.

முன்ஷி முபாரக் அலி என்பவர் மோதிலால் நேருவின் குடும்பத்துக்கு மிகவும் வேண்டியவர். அலகாபாத் ஆனந்த பவனத்தில் அவர்களுடனேயே இருந்தவர். கமலாவுக்கும் ஜவாஹர்லால் நேருவுக்கும் நடந்த திருமணத்தை நேரில் கண்டு களித்தவர். ஆண் பிள்ளைக் குழந்தை பிறந்து அதி மேதாவியாக வாழ வேண்டும் என்று வாழ்த்தியவர். அதோடு பிறந்த குழந்தையைப் பார்த்த பின்னரே, தாம் கண்ணை மூட வேண்டும் என்று ஆசைப்பட்டவர்.

அவர் உடல் நலம் குன்றி மரணப் படுக்கையில் இருந்தபொழுதுதான் இந்திரா பிறந்தாள். அவர் ஆசைப்படி குழந்தையைக் கொண்டு போய்க் காட்டினார்கள். பிறந்திருப்பது பெண்ணா, பிள்ளையா என்பதை அறியாமலே அவர் கண்களை மூடிவிட்டார்.

ஆனாலும் அவர் வாழ்த்து வீண் போகவில்லை. பெண்ணானாலும் இந்திரா ஆண்களுக்கும் மேலாகச் செயலாற்றிப் புகழ் பெற்றுள்ளார்.

தந்தைக்கும் தாய்க்கும் அருமந்த மகளான அன்றைய இந்திரா பிரியதரிசினிதான் இன்றையப் பாரதப் பிரதமர் **இந்திரா காந்தி**.

தேசப் பற்றில் தந்தைக்குச் சோடையில்லை தாயும். 1932ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தேதி கமலா நேருவும் சிறைப் படுத்தப்பட்டாள். இந்தச் செய்தி அறிந்து ஜவாஹர்லால் அதைத் தமக்குக் கிடைத்த புத்தாண்டு பரிசாக எண்ணி மகிழ்ந்து போனார்.


அப்பாவையும் அம்மாவையும் கொண்டு வளர்ந்த இந்திரா காந்தி, ''அப்பா! ஆனால் 'ஜோன் ஆஃப் ஆர்க்' மாதிரி ஆகணும்! எப்படி அப்பா ஒரு பெண்மணிக்கு அத்தனை வீரம் வந்தது?'' என்று கேட்டாள். எத்தனாவது வயதில் தெரியுமா? எட்டாவது வயதில்.

அவள் அந்தப் பிராயத்தில் பிரான்சு சென்றிருந்த பொழுது, சிலையைப் பார்த்து, கதையைப் படித்து, அப்படி மனத்தில் உருவேற்றிக் கொண்டிருந்தாள்.

அவள் உள்ளத்தைப் படித்த ஜவாஹர், வீர மாதர்களின் கதைகள் பல சொல்லி அவளது பிஞ்சு உள்ளத்தில் வீரத்தை விளைவித்ததோடு, உள்ளத்தை வளையவும் வைத்துவிட்டார். அது மட்டுமா? உலக வரலாற்றைத் தம் மகளுக்கு எழுதுவது போல், உங்களுக்கும் எனக்கும் எல்லோருக்குமே எழுதி யிருக்கிறார்.

தந்தை மகள் இருவருடைய பிறந்த நாட்களுமே நவம்பர் மாதம் 14, 19 தேதிகளில் வருகின்றன.

அன்பில் தோய்ந்த நேருவோ இப்பொழுது நமக்கெல்லாம் அன்புருவாகவே ஆகிவிட்டார். அவர் நினைவில் நாம் நாட்டைப் பேணி நலம் பெறுவோமாக. — **மீழலைக் குறும்பன்**



கடல் கிழவர்

வாண்டு மாமா

கடற்கரை அருகிலேயிருந்த ஒரு குகையில் தன்னந் தனியாக வாழ்ந்து வந்தார் அந்தக் கிழவர். கடல்வண்ணன் என்பது அவர் பெயர். மீன் பிடிக்கச் செல்லும் செம்படவர்களிலிருந்து கடல் மீது பாய்மரம் விரித்துப் பிரயாணம் செய்யும் மாலுமிகள்வரை எல்லோருக்கும் அந்தக் கிழவரைப் பற்றித் தெரியும். ஏனென்றால் கடலின் மீது செல்ல வசதியான காற்று எப்போது வீசும், புயல் எப்போது வரப் போகிறது என்பதையெல்லாம் முன்கூட்டியே சொல்லக்கூடிய ஆற்றலுடையவராக இருந்தார் அந்தக் கிழவர். அவர் சொற்படி கேட்டவர்கள் கடல் விபத்துக்களிலிருந்து தப்பியிருக்கிறார்கள். யார் வந்து எந்த வேளையில் கேட்டாலும் அவர்களுக்கு எவ்விதக் கட்டணமுமின்றிக் காலநிலை பற்றிய தகவல்களைக் கூறுவார் கடல்வண்ணன்.

கிழவரின் புகழ் நாடெங்கும் பரவியது. கடல்வண்ணனுக்கு இந்த அற்புத ஆற்றல் எப்படி ஏற்பட்டது? கடலின் காலநிலை பற்றி அவர் எப்படி முன்கூட்டியே அறிகிறார் என்ற இரகசியம் மட்டும் யாருக்கும் புரியவில்லை.

கடல்வண்ணனை நாட்டு மக்களெல்லாம் போற்றினார்கள்; புகழ்ந்தார்கள்; வாழ்த்தினார்கள் — ஆனால் ஒரே ஒருவரைத் தவிர. அவர்தான் அந்நாட்டு மன்னர் மார்த்தாண்ட வர்மன். கடல்வண்ணனின் புகழிலே பொறாமை கொண்டது அவன் உள்ளம். தனக்குக் கிடைக்காத போற்றுதலும், புகழும் ஒரு கிழவனுக்குக் கிடைப்பதா என்று அரசன் புழுங்கிப் போனான். ''(கடல்) காற்று, (கடல்) நீர் இவைகளின் நிலை அறிந்து கூறுபவன் நிச்சயம் ஒரு சூனியக்காரனாகத்தான் இருக்க வேண்டும்'' என்ற முடிவுக்கு வந்தான் மன்னன் மார்த்தாண்டன்.

ஒரு நாள் தன்னை ஒரு மாலுமியைப் போல் உருமாற்றிக் கொண்டு கடல்வண்ணனிடம் போனான் மன்னன். தான் கப்பலில் அயல்நாடு செல்ல விரும்புவதாகவும், கடல் பிரயாணத்துக்குத் தகுதியான வேளையைக் குறிப்பிடும்படியும் கேட்டுக் கொண்டான். யாருக்கும் எவ்வித ஊதியமும் பெறாமல் உதவும் அந்தக் கிழவர் மார்த்தாண்டனுக்கும் உதவினார்.

''அது சரி தாத்தா! இத்தனை கச்சிதமாகக் கடல்நிலை அறிந்து நீங்கள் எப்படிச் சொல்கிறீர்கள்? குட்டிச் சாத்தா

னுடன் தொடர்புண்டோ உங்களுக்கு?'' என்று கேட்டான் மன்னன்.

இந்தக் குத்தலான கேள்வியினால் கோபம் கொண்டாலும் தம் உணர்ச்சியை வெளிக்காட்டாமல் கிழவர், ''இந்த விஷயங்களை எனக்கு என் நண்பர்கள் கூறுகிறார்கள். தகுதியுடைய மாலுமிகளுக்கு இந்த இரகசியங்களைக் கூறுவதால் கோபமடையாதவர்கள் அந்த என் நண்பர்கள்'' என்றார்.

''அந்த அதிசய நண்பர்கள் யாரோ?'' என்றான் மன்னன்.

''அவர்கள் என்னோடு எப்போதும் இருக்க மாட்டார்கள். அவர்களை உன்னால் காண முடியாது'' என்றார் கடல்வண்ணன். இதற்குள் வந்திருப்பது மாறுவேஷத்தில் மன்னன் என்பதை உணர்ந்து கொண்டு விட்டார் கிழவர்.

கடல்வண்ணனின் பதிலைக் கேட்டு நகைத்த மன்னன் ''நீ உன் நண்பர்களைப் பற்றிய உண்மைகளைக் கூறுவிட்-



டால் இந்தச் சூனியக்கார வேலைகளுக்காக உனக்குக் கடுமையான தண்டனை கிடைக்கும்'' என்றான்.

இதனால் கிழவர் பயந்துவிடவில்லை. ஆனால் கோபமடைந்தார். ''என் நண்பர்களை நீ பார்க்க விரும்பினால், உன்னால் முடியுமானால் சூரியன் மலைவாயில் விழுந்ததும் என் குடிசைக்கு என்னோடு கிளம்பச் சித்தமாக வந்து சேர். ஆனால் அந்தப் பிரயாணத்தில் ஏதாவது விபத்து நேருமானால் அதற்கு நான் பொறுப்பாளியல்ல. என் நண்பர்களைச் சந்திக்கும் முயற்சியில் உனக்கு ஏதாவது நேருமானால் 'முன்னதாகவே ஏன் எச்சரிக்கவில்லை?' என்று குற்றம் சாட்டக்கூடாது. என்ன, புரிந்ததா?'' என்றார் கிழவர். மன்னனும் நிபந்தனையை ஏற்றுக் கொண்டு மாலை வருவதாகக் கூறிப் போனான்.

குறிப்பிட்ட நேரத்தில் கடற்கரை மலைக் குகைக்கு வந்து விட்டான் மன்னன் மார்த்தாண்டன். அப்போது, இருட்டும் வேளை. கடல்வண்ணனும் தயாராக இருந்தார். நீந்துவதற்கு வாகாக இடையில் ஒரே ஒரு சிறு துணி மட்டுமே அணிந்திருந்தார். அவருடைய இரு கைகளிலும் கனமான இரும்பு உலக்கைகள் இருந்தன. மங்கலான நிலவொளியில் கிழவரின் உடல் மீனின் உடலைப் போல் பளபளப்பதைக் கண்டான் மன்னன். ஆனால் அது அந்த அமைதியான கடலில் விழும் நிலவொளியின் பிரதிபலிப்பாக இருக்குமென்றுதான் நினைத்தான். தன் கையிலிருந்த இரண்டு இரும்பு உலக்கைகளையும் மன்னனிடம் கொடுத்து, ''என்னைத் தொடர்ந்து வருவதற்கு இவ்விரண்டு உலக்கைகளும் உனக்குத் தேவைப்படும். நான் இவைகளைப் பயன்படுத்துவதை நிறுத்தி வெகு நாட்களாயிற்று. நாம் கடலுக்குள் நீந்திப் போகப் போகிறோம். நினைவிருக்கட்டும். நாம் கடலின் ஆழத்துக்குப் போனதும் கரை நம்மை விட்டு மறைந்துவிடும். என்னைத் தொடர்ந்து வா'' என்று கூறிக் கடலை நோக்கி நடக்கலானார் கிழவர்.

நீண்ட நெடுஞ் சாலையில் நடப்பது போல் கடல் நீருக்குள் இறங்கி நடந்தார் கிழவர். அவருக்குப் பின்னால் வந்த மன்னன் கிழவரின் முதுகு நிலவொளியில் பளபளப்பதைக் கண்டான். கடல் நீருக்குள் ஓர் அடி, இரண்டடி, மூன்று... கிழவர் வெகு வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தார். கடல் நீர் முழங்காலுக்கு, துடைக்கு, இடுப்புக்கு என்று உயர்ந்து கொண்டே போனது. மஞ்சள் நிற நிலவொளியில் வெள்ளியாகப் பளபளத்தன கடல் அலைகள். இவர்கள் முன்னேற்றத்தினால் ஏற்படும் சலனத்தைத் தவிர கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் ஒரே கருநீலக் கடல் நீர்தான்.

தகதகக்கும் கடல் நீர் கிழவரின் தோள்வரையில் வந்துவிட்டதைக் கண்டான் மன்னன். அந்த நிலையிலும் அவர் வேகமாக, லாகவமாக முன்னேறிக் கொண்டிருந்தார். நீருக்குள் நடப்பதற்கென்றே உருவாக்கப்பட்டது போலிருந்தது அவரது உடல். திடீரென்று எவ்வித ஓசையுமின்றி அவர் தலையும் நீருக்குள் மூழ்கி மறைந்தது. அவர் இருந்த இடத்தில் கடல் அலை கொக்கரித்துச் சிரித்தது.

அதே நேரத்தில் பின்னால் வந்து கொண்டிருந்த மார்த்தாண்டன் தனது காலின் கீழுள்ள மணல் நழுவுவதை

உணர்ந்தான். கைகளில் இருந்த இரும்பு உலக்கைகள் அவனை நீருக்குள் இழுத்துக் கொண்டிருந்தன. கால் கீழே பாவவில்லை. இரும்பு உலக்கைகளைப் பற்றிக் கொண்டு நீருக்குள் எப்படி...? அவனைக் கடல் நீர் சூழ்ந்து கொண்டது. மூச்சு முட்டித் திணறியது. இனியும் அந்த இரும்பு உலக்கைகளைப் பிடித்துக்கொண்டிருப்பது பைத்தியக்காரத்தனம் என்று கருதி அவன் அவைகளை நழுவ விட்டான். நீச்சல்காரர்களின் அசைவோடு நீரின் மேல் மட்டத்தை நோக்கி எழலானான். அப்போது கடல் நீரின் நீல நிறத்துக்குள் அதன் அடியிலே பெரிய கோட்டை போன்ற அரண்மனை மிதந்து கொண்டிருப்பதைக் கண்டான். அம்மாளிகையின் பக்கங்களில் கடல் தாவரங்களால் ஆகிய கானகம் கனைத்துக் கிடந்தது. அந்தக் கானகத்திடையே பலப் பல அழகிய முகங்கள் எட்டிப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டான். 'அந்த முகங்கள்தான் எத்தனை அழகானவை! கடல் கன்னிகள் என்பது இவர்கள் தானோ?' என்று எண்ணமிட்டான் மன்னன். இத்தனையும் ஒருசில விநாடிகளே கண்டான் — நீர் மட்டத்துக்கு அவன் உடல் உயருவதற்குள். கடல் மட்டத்துக்கு வந்தவன் தன்னுடைய பலமிக்க கைகளை மாற்றி மாற்றிப் போட்டுக் கரையை நோக்கி நீந்தலானான். நல்ல பலம் பொருந்தியவனாதலால் விரைவிலேயே அவன் கால்கள் கடலின் கரைப் பகுதியின் மணல் பரப்பை ஸ்பரிசிக்கலாயின. சற்றைக்கெல்லாம் கடல் கரை மணலில் ஆயாசத்தோடு வந்து விழுந்தான். "நல்ல வேளை! எனக்கு நீந்தத் தெரிந்ததோ உயிர் பிழைத்தேன். அந்தச் சூனியக்காரக் கிழவன் மூழ்கிச் செத்துத்தான் போயிருப்பான். முட்டாள்தனமாக அவனைப் பின் தொடர்ந்து போனேனே!" என்று தன் புத்திசாலித் தனத்தை மெச்சிக் கொண்டே கொஞ்ச நேரம் மணலில் உட்கார்ந்து ஆசுவாசப் படுத்திக் கொண்டான். பிறகு கிழவரின் குகைக்குப் போய்த் தீ மூட்டி உடலில் சூடு உண்டாக்கிக் கொண்டு அங்கிருந்த உணவைச் சமைத்துச் சாப்பிட்டுவிட்டு அங்கேயே படுத்துத் தூங்கியும் போனான்.

காலையில் மார்த்தாண்டனுக்கு விழிப்பு வந்தபோது சூரியனின் கிரணங்கள் குகை வழியே வந்து சுளீரென்று உடலைத் தாக்கிற்று. அடுத்த பகுதியான சமையலறையில் உணவு தயாரிக்கும் ஓசையும் மணமும் எழுந்தன. துள்ளி எழுந்தான். ஓடிப்போய் எட்டிப் பார்த்தான். என்ன விந்தை? அங்கு கிழவர் உணவு தயாரித்துக் கொண்டிருந்தார். புதிய பழங்களும் காய்கறிகளும் வைக்கப்பட்டிருந்தன.

திறந்த வாய் மூடாமல் நிற்கும் மார்த்தாண்டனைப் பார்த்துப் புன்சிரிப்புடன், "நேற்றிரவு நீ என்னைத் தொடர்ந்து வரவில்லை போலிருக்கிறதே! நான் மட்டும்தான் தனியே என் நண்பர்களைச் சந்திக்கச் சென்றேன்" என்றார். அவர் கண்களில் குறும்புச் சிரிப்புப் பளபளத்தது. பிறகு தொடர்ந்து, "காலைக் கடன்களை முடித்துக் கொள். சூடு ஆறு முன் சாப்பிட்டால் சிற்றுண்டி சுவையாக இருக்கும்" என்றார் கிழவர்.

மார்த்தாண்டன் தன் அரண்மனைக்குத் திரும்பிக் கொண்டிருந்த போது கிழவரின் அதிசயமான செயல்களையும்



அவரது ரகசியங்களையும் பற்றியே நினைத்துக் கொண்டு போனான். 'அந்தக் கிழவனை எப்படியும் என் அடிமையாக்கிக் கொள்வேன். அப்போது அவனுடைய திறமைகளையும் ரகசியங்களையும் எனக்கு மட்டுமே பயன்படும்படி பண்ணுவேன். இது உறுதி' என்ற முடிவோடு அரண்மனைக்குப் போனவன் முதல் காரியமாக இம்மாதிரிக் காரியங்களை நிறைவேற்றுவதற்காக இருக்கும் முரடர்கள் இருவரை வரவழைத்தான். கிழவரைப் பற்றி அவர்களிடம் கூறிவிட்டு, "நான் என்னுடைய மலைவாசப் பங்களாவில் இருப்பேன். அந்தக் கிழவன் என்னை அங்கு வந்து காண வேண்டும். அவனாக விரும்பி வருவது

நல்லது. அப்படி அவன் வர முரண்டிஞல் நீங்கள் உங்கள் திறமையைக் காட்டி அவனை இங்கு இழுத்து வர வேண்டும். ஆனல் ஒன்று, அவனுடைய உயிருக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படுத்தக் கூடாது. உங்கள் முரட்டுத் தனத்தை அளவோடு பயன்படுத்துங்கள். இல்லாவிடில் உங்களை உயிரோடு விடமாட்டேன். போய் வாருங்கள். கிழவன் இல்லாமல் நீங்கள் திரும்பாதீர்கள்'' என்று ஆணையிட்டு அனுப்பினன். குண்டர்கள் உற்சாகமாகக் கிளம்பினர்கள்.

குண்டர்கள் கடற்கரைக்கு வந்த போது பகலின் பெரும் பகுதி ஆகிவிட்டது. மூன்று பேரைக் கூப்பிடு தூரத்தில் நிறுத்திவிட்டுத் தலைவனும் இன்னெருவனும் மட்டும் கிழவரின் குடிசைக்குப் போனர்கள். குரல் கொடுத்தார்கள். கடல் வண்ணன் வெளியே வந்தார். ''தோழர்களே! உங்களுக்கு என்ன தேவை?'' என்று கேட்டார்.

''நாங்கள் உன் தோழர்களுமல்ல. எங்களுக்கு எந்த உதவியும் தேவையில்லை. நாங்கள் மன்னர் மார்த்தாண்டனிடமிருந்து வருகிறோம். அவர் மலைக் கோட்டை அரண்மனையில் உங்களை எதிர்பார்த்துக் காத்திருக்கிறர். ஆகவே, மறுப்புத் தெரிவிக்காமல் எங்களுடன் கிளம்புங்கள்'' என்றன்.

கிழவர் வழக்கப்படி தம் இனிமையான சிரிப்புடன், ''மன்னர் என்னைக் கௌரவித்து அழைத்ததற்காக நன்றி. ஆனல் என்னல் கடற்கரையை விட்டு வர முடியாதே!'' என்றர்.

குண்டர் தலைவன் உடனே கைதட்டினன். காத்திருந்த மூவரும் ஓடி வந்தார்கள். இரண்டு பேர் கிழவரின் இரு கைகளையும் இருவர் அவரது இரு கால்களையும் பற்றி அப்படியே அவரைக் குப்புறத் தரையில் தள்ளி அமுக்கிக் கொண்டு அட்டகாசமாகச் சிரித்தார்கள். ஆனல் அவர்களை அதிக நேரம் சிரிக்க விடவில்லை கிழவர். திமிறிக் கொண்டு அவர்களிடமிருந்து அவர் விடுபட்டுச் சுதந்திரமாக நின்றபோது குண்டர்கள் ஐவரும் மூச்சு வாங்கத் திணறியபடி தலை சுற்ற நின்றர்கள்.

''இந்தக் கிழவன் மீனைப் போல் அல்லவா வழுக்கிக் கொண்டு போகிறன்?'' என்றன் குண்டர்களில் ஒருவன். தலைவன் தன் கர்லாக் கட்டையை இலேசாகப் பயன்படுத்திக் கிழவரை மூர்ச்சை அடையச் செய்ததும், மற்றவர்கள் அவரைத் தூக்கிக் குதிரையின் மீது வைத்துக் கயிற்றினல் நன்றகக் கட்டி மன்னரின் மலைவாசஸ்தலத்தை நோக்கிக் கிளம்பினர்கள்.

மாலை மயங்கி இரவு கவிந்தது. அதற்கு மேல் பிரயாணம் செய்து மலைக் கோட்டை அரண்மனையை அடைய முடியாது என்ற முடிவுக்கு வந்தார்கள். இரவு தங்கி மறுநாள் மன்னனிடம் போவதென்று முடிவு செய்து ஒரு நதிக் கரையில் இரவு தங்க முடிவு செய்து கூடாரம் அடித்தார்கள். உணவு தயாரிக்க முற்பட்டார்கள். இந்த வேளையில் கிழவரின் நினைவு ஒருவனுக்கு வரவே அவர் அருகில் போய்ப் பார்த்தான். அவர் குதிரையின் மீது கட்டப்பட்ட நிலையில் தொய்ந்து துவண்டு முடங்கிக் கிடந்தார்.

''அண்ணே! ஓடி வா, ஆபத்து'' என்று அலறினன் அவன். கிழவர் நிலை அப்படி இருந்தது. மூச்சுவிடுகிறரா இல்லையா என்பது தெரியவில்லை. முகம் வெளுத்து விகாரமாகி விட்டிருந்தது. குண்டர்கள் அவரது கட்டுக்களை அவிழ்த்துக் குதிரையிலிருந்து இறக்கினர்கள். மன்னரின் எச்சரிக்கை அவர்களுக்கு நடுக்கமூட்டியது. 'கிழவருக்கு ஆபத்து ஏதும் ஏற்பட்டுவிடக் கூடாதே!' என்று தவித்தார்கள். கிழவரின் உடலில் மிருதுத் தன்மை இல்லை. காய்ந்த சருகாக இருந்தது. உதடுகள் காய்ந்து நீலம் பாய்ந்துவிட்டன. கண்களோ பஞ்சடைந்து ஒளி இழந்து வெளுத்துப் போய்.... 'செத்துப் போய் விடுவாரோ?'... இந்த நினைப்பே அவர்களை நடுங்க வைத்துவிட்டது. பரபரப்புடன் ஒருவன் கிழவரின் கைகளைத் தேய்த்து உடலில் சூடு உண்டாக்கினன். ஒருவன் அவர் மீது போர்வைகளைப் போர்த்தினன். குளிர்ந்த காற்றிலிருந்து காப்பாற்ற. குண்டர் தலைவனின் வீறுப்பெல்லாம் ஓடிப் போய் விட்டது. திகிலுடன் ஓடைக்கு ஓடி ஒரு பாத்திரத்தில் நீர் மொண்டு வந்து கிட்டிப் போயிருந்த கிழவரின் வாயில் சொட்டுச் சொட்டாக ஊற்றினன். அவன் கை நடுங்கிக் கொண்டிருந்தது.

முதல் துளி கிழவரின் வாயில் விழுந்ததுமே அற்புதம் நிகழ்ந்தது. சட்டென்று அவர் தோற்றத்தில் மாற்றம் ஏற்பட்டது. காய்ந்து கிடந்த உடல் மிருதுவாயிற்று. முகத்தின் வெளுப்பு மாறித் தகதகப்பு கூடிற்று. நீர் உள்ளே போகப் போக அவர் எழுந்து உட்கார்ந்தார். தண்ணீர்ப் பாத்திரத்தைத் தம் கைகளாலேயே வாங்கிப் பருகினர்.

''என்னை அந்த ஓடைக் கரைக்குத் தூக்கிச் செல்லுங்கள். கடல் நீரைப்

போல் இது உப்பாக இல்லாவிட்டாலும் ஒரு மனிதன் உயிர் வாழ இது போதுமானது'' என்றார் கிழவர் தீனமாக.

அவர் பேசியதே அவர்களுக்கு ஆனந்தமாக இருந்தது. உடனே அவரைத் தூக்கிக் கொண்டு ஓடைக் கரைக்கு ஓடினார்கள். ஓடையை அடுத்த புல் தரையில் அவரை நலுங்காமல் வைத்தார்கள்.


''இன்னும் அருகே.... அருகே'' என்றார் கிழவர், தமது கரகர்த்தகுரலில். குண்டர் தலைவன் அவரை ஓடைக் கரையின் ஓரத்துக்குத் தூக்கி உட்கார வைத்தான். கிழவர் தமது ஒரு காலை ஓடைக்குள் முக்கித் துழாவினார். அடுத்த காலும் அதைத் தொடர்ந்தது. மறு விநாடி கிழவர் ஓடையிலே காலூன்றி நிற்கலானார், முழங்கால் அளவு நீரில். குண்டர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே சற்று முன்பு தள்ளாடித் தவித்த அவர் கால்கள் நிமிர்ந்து நேராயின. கிழவர் தண்ணீரைக் கைகளால் வாரி வாரி மேலே உடல் முழுதும் இறைத்துக் கொண்டார், குழந்தையைப் போல. முகத்தை ஓடை நீருக்குள் முக்கிக் கொண்டார். நீரில் விழுந்து புரண்டு உருண்டார். அவர் உடலில் பளபளப்பு ஏற்பட்டது. இடுப்பளவு நீரில் நின்றபடி கிழவர் குண்டர்களுடன் பேசினார். அவர் முகத்தில் வெண்மை மறைந்து செம்மை பரவி இருந்தது. கண்கள் ஒளி விட்டு மினுக்கின.

''இந்தப் பிரயாணம் என் உயிரையே குடிக்க விருந்தது. இன்னும் கொஞ்ச தூரம் என்னை நீங்கள் கொண்டுபோய் இருந்தீர்களானால் நான் இறந்தே போயிருப்பேன். கடல் நீரிலிருந்து பிரிந்து என்னால் உயிர் வாழ முடியாது. இந்த ஓடையேகூட எங்காவது ஓர் ஏரியில் போய் முடியுமானால் எனக்கு என் பலம் திரும்பி யிருக்காது. இது கடலில் போய்க் கலக்கிற நதி. ஆகவே தான் என் உடலில் உணர்வும் உயிரும் திரும்பின. இப்போதாவது புரிகிறதா உங்களுக்கு, நான் ஏன் உங்கள் மன்னரின் அழைப்பை ஏற்க மறுத்தேன் என்று ?'' இப்படிக் கூறிக்கொண்டே கிழவர் ஓடை நீரின் ஓட்டத்தோடு, அதன் நடு மையத்துக்குப் போனார். தண்ணீர் அவரைச் சூழ்ந்து கொண்டு உயர்ந்தது. இடுப்பு, மார்பு, தோள் பட்டை.... அடுத்த விநாடி அவரது தலை நீருக்குள் அமிழ்ந்து மறைந்தது. அடுத்த சில விநாடிகளில் வெண் நுரையான ஓர் அலை வேகமாகக் கடலை நோக்கி முன்னேறுவதைக் கண்டார்கள் அந்த ஐந்து குண்டர்களும். விநாடிக்கு விநாடி அதன் வேகம் அதிகமாகியது. பார்வையிலிருந்து மறையும் வரை அதையே பார்த்தபடி திக்பிரமை பிடித்துப் போய் நின்று கொண்டிருந்த குண்டர்கள் பிறகு மௌனமாகத் தங்கள் கூடாரத்துக்குத் திரும்பினார்கள். தங்களுக்குள் பேசிக் கொள்ளக்கூடச் சக்தியற்றவர்களாக இரவெல்லாம் உட்கார்ந்திருந்தார்கள்.

'மலையிலிருந்து உற்பத்தியாகும் அந்த ஓடை நதியாகக் கடலில் போய்க் கலக்கிறது. இந்நேரம் கிழவர் அதன் ஓட்டத்தோடு கடலில் போய்ச் சேர்ந்திருப்பார்!' என்ற எண்ணமே அந்த ஐவரின் உள்ளத்திலும் அலைமோதிக் கொண்டிருந்திருக்க வேண்டும்.

இதன் பிறகு யாருமே கிழவரைக் காணவில்லை. கடல் கிழவர் மறைந்தாலும் அவர் நினைவு மக்களின் மனத்திலே நெடுங் காலம் நிலைத்திருந்தது. கடல் கன்னிகளைப் போல் கடலில் வாழும் கடல் மனிதர்களின் வழி வந்தவர் இந்தக் கடல் கிழவர் என்று மக்கள் அவரைப் பற்றிக் கதை கதையாகத் தம் குழந்தைகளுக்குக் கூறினார்கள்.





சந்திரனில் புள்ளி

பார்வதி சீனிராஜன்

பர்மா தேசத்தில் ஒரு கிராமத்தில் ஒரு கிழவி வசித்து வந்தாள். அவளுக்கு இரண்டு பேரக் குழந்தைகள். பெரியவன் பெயர் ஹாவு. சிறியவன் பெயர் மாவு. கிழவியும் பேரக் குழந்தைகளும் வறுமையில் வாடி வந்தனர்.

அந்தக் கிராமத்து ஜனங்களுக்குக் கிழவி மேல் மிகவும் கோபம். ஏனென்றால் கிழவிக்கு இறந்தவர்களை உயிர்ப்பிக்கும் சக்தி உண்டு என்று ஒரு வதந்தி உலவி வந்தது. ஆனால் கிழவி யாருக்கும் உயிர் கொடுப்பதில்லை. அதனால் எல்லோருக்கும் அவளிடம் கோபம்.

ஒரு நாள் கிழவிக்கே கடுமையான ஜுரம் கண்டது. கிழவி தன் பேரர்களை அழைத்துக் கூறினாள். ''குழந்தைகளே! நான் இன்னும் சில மணி நேரங்களே உயிருடன் இருப்பேன். உங்களுக்குக் கொடுப்பதற்கு என்னிடம் ஒன்றுமே இல்லை. இந்தச் சின்ன உரலும் உலக்கையும் தவிர. ஹாவு! நீ உரலை வைத்துக்கொள். மாவு! நீ உலக்கையை வைத்துக் கொள்'' என்று கூறிவிட்டுக் கிழவி இறந்துவிட்டாள். அது வைத்தியர்கள் மருந்து இடிக்கப் பயன்படுத்தும் சிறிய உரலும் உலக்கையும்.

ஹாவுக்குக் கோபம் வந்துவிட்டது. 'கிழவிக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. அதனால்தான் இந்த மாதிரிப் பரிசளிக்கிறாள்' என்றெண்ணி அந்த உரலை நதியில் விட்டெறிந்துவிட்டான்.

ஆனால் மாவுக்கு எப்போதுமே கிழவியிடம் ரொம்ப ஆசை உண்டு. அவன் அந்தச் சிறிய உலக்கையை எப்போதும் தன்னிடமே வைத்துக்கொண்டிருப்பான். அது அருகில் இருக்கும் போது அவனுக்குத் தன் பாட்டியே அருகில் இருப்பது போல் தோன்றும். ஆனால் அவனையும் அவன் உலக்கையையும் பார்த்து எல்லோரும் சிரித்தனர். மாவு அதைக் கண்டு கொள்ளவில்லை.

ஒரு நாள் மாவு காட்டிலிருந்து விறகு வெட்டி எடுத்துக் கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தான். வழியில் ஒரு பாம்பு. பாம்பைக் கண்டதும் மாவு பயந்து விட்டான். ஆனால் அந்தப் பாம்பு உடனே பேச ஆரம்பித்தது. ''தயவுசெய்து என்னுடன் வா. என் கணவர் இறந்துவிட்டார். அவருக்கு உயிர் கொடு'' என்றது.

''என்னால் எப்படி முடியும்?'' என்றான் மாவு.

''உன்னிடம்தான் அந்த உலக்கை இருக்கிறதே. அதற்கு உயிர் கொடுக்கும் சக்தி உண்டு. நீ என் கணவரை அதனால் தொட்டால் போதும். அவருக்கு உயிர்வந்துவிடும்'' என்றதுபாம்பு.

மாவு உடனே விறகுக் கட்டைக் கீழே போட்டுவிட்டுப் பாம்புடன் சென்றான். பாம்பு கூறியபடியே அந்த உலக்கையால் தொட்டதும் இறந்த பாம்பு நெளியத் தொடங்கியது.

''குழந்தாய்! இந்த உலக்கையின் ரகசியத்தை யாரிடமும் சொல்லாதே. சொன்னால் உனக்கு ரொம்பக் கஷ்டங்கள் வந்து சேரும். உன் பாட்டி இந்த ரகசியத்தை வெளியிட்டதால் தான் ரொம்பக் கஷ்டப்பட்டாள். இந்தா! இந்த மாணிக்கத்தை என் அன்புக் காணிக்கையாகப் பெற்றுக் கொள்'' என்று மாவுக்கு ஒரு மாணிக்கத்தைக் கொடுத்தது.

மாவு வீடு நோக்கி நடந்தான். வழியில் ஒரு நாய் செத்துக் கிடந்தது. மாவுக்குத் தன் உலக்கையின் ரகசியத்தை மறுபடியும் சோதிக்கத் தோன்றியது. ஆகவே அதனால் அந்த நாயைத் தொட்டான். உடனே நாய் வாலை ஆட்டிக் கொண்டு எழுந்து நின்றது. மாவு அதை அன்புடன் தன் கூடவே அழைத்துச் சென்றான்.

அன்றிலிருந்து மாவு மிகவும் பிரபலமாகிவிட்டான். இறந்தவர்களுக்கெல்லாம் உயிர் கொடுக்க ஆரம்பித்து விட்டான்.

ஒரு நாள் அவ்வூர் ராஜகுமாரி இறந்து விட்டாள். உடனே அரசன் மாவுக்கு ஆள் அனுப்பினான். மாவு தன் உலக்கையுடன் சென்று ராஜகுமாரிக்கு உயிர் அளித்தான். அரசனுக்கு ரொம்ப சந்தோஷம். தன் பெண்ணை மாவுக்கு மண முடித்து அவர்களைத் தன் அரண்மனையிலேயே வைத்துக் கொண்டான்.

அரண்மனைக்குச் சென்ற பிறகும் யாராவது வந்து அழைத்தால் உடனே தன் உலக்கையுடன் புறப்பட்டுவிடுவான் மாவு. இது அவன் மனைவிக்குப் பிடிக்க வில்லை. அரசனாகப் போகிறவன் இப்படி யார் அழைத்தாலும் உடனே கிளம்பிப் போனால் அவளுக்குப் பிடிக்குமா.

''வருங்கால அரசே, நீங்கள் யார் அழைத்தாலும் இப்படி உங்கள் உலக்கை யுடன் எங்கு வேண்டுமானாலும் போகக் கூடாது'' என்று கூறி அந்த உலக்கையை ஒரு பெட்டியில் வைத்து அதற்குக் காவ லும் போட்டு விட்டாள்.

இதற்குள் தேவலோகத்தில் ஒரே குழப் பம், பரபரப்பு. கடவுளும் தேவர் களும் மிகவும் கவலைக்குள்ளாயினர். ஏனென்றால் சில நாட்களாக இறந்த மனிதர்கள் ஒருவரும் அவர்களிடம் வரக் காணோம். உடனே தேவ தூதர்கள் பூலோகத்துக்கு வந்தனர். அவர்களுக் கும் மாவுவைப் பற்றிய உண்மை தெரிந்து விட்டது.

அவர்கள் திரும்பிச் சென்று, ''பகவானே! பூலோகத்தில் மாவு என்று ஓர் அரசன் இருக்கிறான். அவ னிடம் ஒரு சிறிய உலக்கை இருக்கிறது. யார் இறந்தாலும் அந்த உலக்கையால் அவர்களைத் தொட்டு உயிரளித்து விடு கிறான் மாவு. அதனால்தான் யாருமே இங்கு வருவதில்லை'' என்றனர்.

இதைக் கேட்டதும் தேவர்களும் தேவதைகளும் மிகவும் ஆச்சரியப்பட் டனர். மாவு அவன் மனைவி இருவரும் ரொம்பவும் அழகு என்பதைக் கேள்விப் பட்டு அவர்களுக்கு மிகுந்த பொறாமை உண்டாயிற்று. அந்த உலக்கை அவர்க ளிடம் இருப்பதினால் தான் அவர்களுக்கு அத்தனை அழகு கூடி இருக்கிறது என்ற ரக சியமும் தெரிந்தது. சந்திரனுக்குத் தான் என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவ னவு பொறாமை. அந்த உலக்கையைத் திருடி வர எண்ணி னான்.

ரொம்ப நேரம் யோசனை செய்த


பின் சந்திரனுக்கு ஒரு யுக்தி தோன்றி யது. ஒருவர் கண்ணுக்கும் தெரியாமல் மறைந்து போய் அந்த உலக்கையைத் தொட்டுவிட்டு வந்தான். இவ்வாறு அடிக்கடி செய்யவே சந்திரனும் நாளுக்கு நாள் ரொம்ப அழகாகிக் கொண்டு வந்தான். ஆனால் தினம் இதற்காகப் பூலோகத்துக்குப் போய் வருவது சந்திரனுக்குக் கஷ்டமாக இருந்தது.

ஒரு நாள் சந்திரன் ஒருவர் கண்ணுக் கும் தெரியாமல் வந்து அந்த உலக்கை யையே தூக்கிக் கொண்டு கிளம்பி னான். சந்திரன் ஒருவர் கண்ணுக்கும் தெரியவில்லை. உலக்கை மேலே கிளம்பு வதைக் கண்ட காவலர்கள் பயந்து ஓடிவிட்டனர். ஆனால் மாவுவின் நாய் லபக்கென்று உலக்கையைப் பிடித்துக் கொண்டது. சந்திரன் மேல்நோக்கி இழுக்க நாய் அதைக் கீழ்நோக்கி இழுத் தது. ஆனால் நாயினால் அதிக நேரம் ஈடு கொடுக்க முடியவில்லை. உலக்கை யையும் விட இஷ்டமில்லை. தனக்கு உயிர் அளித்த எஜமானனுடையதல்லவா அது? ஆகவே, நாய் மேலும் கெட்டி யாகப் பிடித்துக் கொண்டது. அதுவும் உலக்கையுடன் மேலே போய் விட்டது.

அன்றிலிருந்து சந்திரன் சுற்றிச் சுற்றி ஓடிக் கொண்டேயிருக்கிறது. நாயும் உலக்கையைக் கவ்வியவண் ணம் அதைப் பின்பற்றி ஓடிக்கொண்டே யிருக்கிறது. சந்திரனில் தோன்றும் புள்ளிதான் உலக்கை. இவ்வாறு விடாமல் ஓடிக் கொண்டிருப்பது தான் சந்திரனில் தோன்றும் மாறுதல் களுக்குக் காரணம்.




ஷீலாவைக் காணோம்
23
கதை: வாண்டுமாமா
சித்திரம்: ரமணி..
ஹெலிகாப்டரை எங்கோ ஓர் இடத்தில் இறக்கிவிட்டுக் குறுக்கு வழியில் நடந்துவந்து தோன்றியிருந்தான் கூட்டாளிகளில் மற்றொருவன் தங்களுடைய மறைவிடமான குகையை நோக்கி. அந்த வேளையில்தானா ஷீலா அவ்வழியாக ஓடி வரவேண்டும்?
ஐயோ டைகர் அந்தப் பாவிகளில் இன்னொருவன் அதோ வருகிறான். நம்மைப் பார்த்துவிட்டான் போலிருக்கிறதே. என்ன செய்வேன்?
இந்தக் குகைக்குள் புகுந்து கொள்ளுவோம். இதிலிருந்து வெளியேற வேறு வழி இருந்தாலும் இருக்கலாம். ஓடி வா, டைகர்.
ஷீலாவின் நம்பிக்கை நாசமாகியது. குகையின் வழி, பாறைச் சரிவினால் அடைபட்டுக் கிடந்தது. திகைத்து நின்ற அவள் பின்னால் தொடர்ந்து வந்தவன் வந்து நின்றான்.
ஐயோ, இதற்கு மேல் வழி இல்லையே.
அதே சமயம் குகையின் இன்னொரு பக்கமிருந்து பயங்கரமான உறுமல் கேட்டது....
ஐயோ! கரடி.. கரடி...



பூதாகாரமான கரடி பயங்கரமான உறுமலுடன் அவன் மீது பாய, அதே சமயம் அக்கொடியவன் தன் கைத்துப்பாக்கியின் விசையை அழுத்த...
அத்தனை பெரிய கரடியின் உடல் அவன் மீது விழுந்து அவனை அழுத்திக் கொண்டது. ஷீலாவும் டைகரும் குகையிலிருந்து வெளியே ஓடினார்கள்...
மூச்சிறைக்க, நிற்காமல் மலைப் பாதையில் ஓடினாள் ஷீலா. அதே சமயம் ஜெஃப்ரி காப்டனைப் பறிகொடுத்த இன்ஸ்பெக்டரும் கங்காராமும் அப்பக்கமாக வந்தது கடவுளின் சித்தம்தான். ஷீலா உற்சாக மிகுதியில் கூவினாள்.
அப்பா... அப்பா...! ஐ ஆம் ஷீலா!
கருநாகம் ஒன்று காலடியில் படமெடுத்துச் சீறுவதைக் கவனிக்க வில்லை அவள்.
ஆனால் டைகர் கவனித்து விட்டது. மறு வினாடி அதன் கூரிய உளிப் பற்கள் பாம்பின் கழுத்தில் பதிந்தன. அதே சமயம் பாம்பும் தனது விஷப் பற்களை டைகரின் உடலில் பதித்து விட்டது.
ஐயோ! பாம்பு.. பாம்பு...
ஓடோடி வந்த கங்காராம் தம் அருமை மகளை அணைத்துக் கொண்டார். ஷீலா தேம்பித் தேம்பி அழுதாள்.
அப்பா... அப்...பா! என் டைகர் என்னை எத்தனை அபாயங்களிலிருந்தெல்லாம் காப்பாற்றியது தெரியுமா? ஐயோ, கடைசியில் அது நாகப் பாம்பின் விஷத்தை முழுவதுமா ஏற்றுக் கொண்டு விட்டது.
பாம்பின் விஷம் உடலில் பரவி விட்டது.
டைகர் பிழைக்கு

தொடரும்..

சாராயம் என்றால் என்ன?

சாராயம் என்ற மதுசாரம் எவ்வளவோ நல்ல காரியங்களுக்கும் பயன்படுகிறது. சாராயத்தில் பல வகைகள் உண்டு. பொதுவாக மனிதர்கள் உண்டு உருளும் வகைக்கு 'எதில் ஆல்கஹால்' என்று பெயர். இதைத் 'தானியச் சாராயம்' என்றும் சொல்வார்கள்.

இவ்வகைச் சாராயங்கள் மாவுப் பொருள், சர்க்கரை இவைகளிலிருந்து



தயாரிக்கப் படுகின்றன. காய்கறிகள், தானியங்கள், பழங்கள் ஆகியவை சாராயத்தின் மூலப்பொருள். மாவுப் பொருளிலிருந்து தயாரிப்பதனால் இதை முதலில் சர்க்கரையாக மாற்றுகிறார்கள். இந்தச் சர்க்கரையைப் பிறகு புளிக்க வைக்கிறார்கள். இப்படிப் புளித்துப் பொங்கிய சர்க்கரைப் பொருளிலிருந்துதான் சாராயம் கிடைக்கிறது.

பொதுவாகச் சாராயம் அரிசி, கோதுமை, பார்லி போன்ற மாவுப் பண்டங்களிலிருந்துதான் தயாரிக்கப் படுகிறது. அயர்லாந்தில் உருளைக் கிழங்கிலிருந்தும் தயாரிக்கிறார்கள். சாராயம் எரிபொருளாகவும் பயன்படுகிறது. பெட்ரோலுக்குப் பதில் மோட்டாரில் சாராயத்தைப் பயன்படுத்தலாம். யந்திரங்களில் உபயோகிக்க இத்துடன் வேறு சில ரசாயனங்களைக் கலந்து அதன் தரத்தை உயர்த்துகிறார்கள்.

நீரை விடச் சாராயம் இலேசானது. இரண்டும் சுலபமாகக் கலக்கக் கூடியது. அக்கலவை நீரை விடக் குறைந்த உறை நிலையை உடையது. பல பொருள்களைக் கரைக்கும் சக்தி பெற்றது. ஆகவே சாராயத்தைக் கரைப்பானாகவும் பயன்படுத்துகிறார்கள். மரங்களுக்கும் உலோகங்களுக்கும் வார்னீஷ் கொடுக்கச் சாராயம் தேவை. மயக்கம் தரும் குளோரஃபாம், ஈதர் தயாரிப்பில் சாராயம் பயன்படுகிறது. பலவகைச் சாயங்கள், மருந்துகள், காடி, தைலங்கள் தயாரிக்கவும் சாராயம் பயன்படுகிறது. இது ஒரு கிருமிநாசினியும் கூட. பொருட்களைக் கெடாமல் காப்பாற்றச் சாராயத்தில் போட்டு வைப்பார்கள்.

பூமியின் நடுவே எப்படி இருக்கும்?

பூமியின் மேல் பாகம் பாறையால் மூடப்பட்டிருக்கிறது. இதன் கனம் பத்திலிருந்து முப்பது மைல்கள் வரை இருக்கும். ஓடு போன்ற இந்தப் பாறை மூடியைத் தாண்டி உள்ளே போகப் போகத் தகிக்கும் உஷ்ணத்தைத்தான் உணருவோம். ஒவ்வொரு 130 அடிகள் கீழே போகும்போதும் உஷ்ணநிலை ஒரு டிகிரி உயர்ந்து கொண்டே போகும். பூமி மட்டத்துக்குக் கீழே இரண்டு மைல் போனால் தண்ணீர் கொதிக்கும்படியான உஷ்ண நிலை இருக்கும். பூமியை முப்பது மைல் குடைந்து கீழே போக முடியுமானால் அப்போது அங்குள்ள உஷ்ணம் எவ்வளவு தெரியுமா? 1200 டிகிரி செண்டிகிரேட். இது பாறைகளை உருக வைக்கப் போதுமானது. பூமியின் நடு மையத்தின் உஷ்ணம் 5500 செண்டிகிரேட் என்று விஞ்ஞானிகள் மதிப்பிட்டிருக்கிறார்கள்.

பூமியின் மேல் பாகத்தை இரண்டு அடுக்குகள் மூடி இருக்கின்றன. நிலப் பகுதிகளை உருவாக்கும் மேல் அடுக்கு கிரானைட் என்ற பாறைகளால் ஆனவை. இந்தக் கிரானைட்டுக்குக் கீழே மிகவும் கெட்டியான கறுப்புப் பாறையாலான அடுக்கு உள்ளது. இதற்கு 'பாஸால்ட்' என்று பெயர். இந்த பாஸால்ட் பாறைதான் பூமியின் மேல் பரப்பைத் தாங்கிக் கொண்டிருக்கிறது. கடல் நீரைக் கொள்ளும் பள்ளத்தையும் உருவாக்கியுள்ளது. பூமியின் நடு மையத்தில் 4000 மைல்கள் குறுக்களவுடைய உருகிய நிலையிலுள்ளதோர் இரும்புப் பந்து இருப்பதாக நம்பப் படுகிறது.



பூமியின் நடுமையம் எவ்வாறு இப்படி ஏற்பட்டது? சூரியனிலிருந்து விண்டு பிரிந்த பூமி ஒரு காலத்தில் எரியும் வாயுக்களோடு கூடிய பெரிய பந்தாகச் சூரியனைச் சுற்றிக் கொண்டிருந்திருக்க வேண்டும். பல்லாயிரம் வருஷங்களில் அந்த நெருப்பு உருண்டை குளிர்ந்து சுருங்கிப் பூமியாக உருமாறியிருக்கிறது. அது சுழன்று கொண்டே சுற்றுவதினால் பந்து போன்ற உருவை அடைந்திருக்கிறது. பூமி குளிரவே ஓடுபோன்ற மேல் பாகம் கெட்டிப் பட்டிருக்கிறது. இப்படிக் கெட்டிப்பட எத்தனை ஆண்டுகள் ஆகியிருக்கும் என்பதை யாராலும் கூற முடியவில்லை.

பொன்னுக்கு வீங்கி

கன்னத்தில் காதுக்கு அருகில் கழுத்தின் மேல் பாகத்தில் வீக்கமும் ஜுரமும் வருமே அப்போது உன் அம்மா தன் தங்கச் சங்கிலியை உன் கழுத்தில் போட்டு, இது பொன்னுக்கு வீங்கி என்பார்கள். ஆனால் பொன் சங்கிலிக்கும் இதற்கும் என்ன சம்பந்தமோ தெரியாது. ஆனால் இது ஒரு நோய். தொத்து வியாதி.

உமிழ் நீர்ச் சுரப்பிகள் வீங்கிக்கொள்வதால் ஏற்படுகிறது. காதுக்கு முன்னால் கீழ்ப் பாகத்தில் பெரோடிட் கிளாண்ட்ஸ் (Parotid glands) என்று ஓர் அவயவம் உள்ளது. இது கிருமிகளால் பாதிக்கப்படும்போது 'மம்ஸ்' எனப்படும் பொட்டலம்மை உண்டாகிறது. இந்தச் சுரப்பிகளைக் கிருமிகள் தாக்கும்போதுதான் இந்த நோய் வருகிறது. இதனால் பாதிக்கப்பட்டவரிடமிருந்து நேரடியாகவே இது மற்றவருக்குப் பரவ வாய்ப்பு உண்டு. பாதிக்கப்பட்டவரின் உமிழ் நீரிலும், மூக்கிலிருந்து வரும் நீரிலும் இக்கிருமிகள் இருக்கும். முதலில் ஒரு பக்கத்துக் கன்னம் வீங்கும். பிறகு அடுத்த பக்கமும் வீங்கும். இந் நோயின் ஆரம்ப அறிகுறி இந்த வீக்கம்தான். உடலின் உஷ்ணம் 104-105 டிகிரிவரை ஏறும். தலைவலி, வாந்தி இருக்கும். சின்னக் குழந்தைகளையும் சிறுவர், சிறுமியரையும் மட்டுமே இது அநேகமாகத் தாக்குகிறது. பெரியவர்களுக்கு அபூர்வமாகவே வரும். ஐந்திலிருந்து பதினைந்து வயது வரையுள்ள குழந்தைகளை—முக்கியமாக ஏழிலிருந்து ஒன்பதுக்குள் இது தாக்குகிறது. ஒரு தடவை ஒருவருக்கு வருமானால் மறுபடியும் இது வருவதில்லை. இது ஓர் அபாயமற்ற நோய். ஆரம்பத்திலேயே கவனித்துச் சிகிச்சை அளித்தோமானால், சில கடுமையான, மாறுபட்ட கேஸ்களைத் தவிர, இந் நோய்க்குச் சாதாரணமாக அதிக வைத்தியம் ஏதும் தேவையில்லை. வீக்கமும், காய்ச்சலும் இருக்கும் வரையில் நோயாளி படுக்கையில் ஓய்வு எடுத்துக் கொண்டிருப்பதே போதும்.



இது பிறருக்குச் சுலபமாகப் பரவக் கூடியதாகையால் இந்நோயாளிகளைத் தனிமைப்படுத்தி வைப்பது நல்லது.

மெனஞ்ஜெடிஸ்

மெனஞ்ஜெடிஸ் என்பது குறிப்பிட்ட தனியான ஒரு நோயல்ல. மெனிஞ்ஜஸில் ஏற்படும் வீக்கத்தினால் ஏற்படுகிறது இந் நோய். மெனிஞ்ஜஸ் என்பது எங்கே உள்ளது? மூளையையும் முதுகெலும்பையும் மூடியுள்ள ஒரு மெல்லிய ஜவ்வு இது. இந்தத் தொற்று நோய்க்குப் பலவிதமான கிருமிகள் காரணமானாலும் மெனிங்கோ கோஸி என்ற ஒருவகைக் கிருமியினாலேயே இது அநேகமாக ஏற்படுகிறது. தலையில் ஏற்படும் காயம், எலும்புருக்கி நோய், கக்குவான் இருமல், பெனுமோனியா, இன்புளுயன்ஸா, ஸ்கார்லட் ஜுரம் ஆகியவைகளினாலும் மெனஞ்ஜெடிஸ் ஏற்படலாம். அநேகமாக இவ்வகை பாக்டீரியா தொண்டை வழியாகவே உள்ளே போகிறது. சிலர் இந்தக் கிருமிகளைத் தொண்டையில் சுமந்துகொண்டு பிறருக்கும் பரப்பி விடுகிறார்கள்.



பச்சிளம் சிசுக்களும், குழந்தைகளுமே இந்நோயினால் அதிகம் பாதிக்கப்படுகிறவர்கள். ஒவ்வொரு பத்து அல்லது ஐந்து வருஷங்களுக்கு ஒரு முறை இந்த நோயின் கொடுமை தோன்றுகிறது. இக்கிருமிகள் முதலில் ரத்தத்தில் வளர்கிறது. இதனால் காய்ச்சலும் குளிரும் வரும். தோலில் சிவப்பான புள்ளிகள் தோன்றும். முடிவாக இக்கிருமிகள் மெனிஞ்ஜஸில் போய்த் தாக்கி வீக்கத்தை ஏற்படுத்துகிறது. அப்போது தலையில் பயங்கரமான வலி ஏற்படும். அடுத்துக் கழுத்து இருப்ப முடியாதபடி விரைப்பாகும். கொஞ்சம் அசைத்தாலும் வலி உயிர் போகும். நோயாளி அநேகமாகக் குழம்பிப் போவான். நினைவிழப்பதும் உண்டு. வாந்தியும் இருக்கும். உடலைத் தூக்கிப் போடும். காக்கை வலிப்புப் போலத் துடிப்பான்.

உடல் அவனுடைய சுவாதீனத்தில் இருக்காது. இதற்கு 'ஸல்பா' மருந்துகளையும், ஆண்டிபயாடிக் மருந்துகளையும் பயன்படுத்திக் குணமாக்குகிறார்கள் வைத்தியர்கள். தக்க வைத்திய உதவி அளிக்கப்படாவிடில் நோயாளிகள் நான்கில் மூவர் இறப்பது நிச்சயம். அத்தனைக்குக் கொடிய வியாதி இந்த மெனஞ்ஜெடிஸ்.

ஸத்தியகாமன்

ரா. கணபதி

ஸத்யகாமன் விதவையாகிய தன் தாய் ஜாபாலாவுடன் வசித்து வந்தான்.

அவனுக்கு ஒரு முனிவரிடம் சென்று வேதங்களைக் கற்க வேண்டும் என ஆவல் ஏற்பட்டது.

பழங்காலத்தில் ரிஷிகளிடம் கல்வி கற்ற சீடர்கள் அந்த ரிஷிகளின் ஆசிரமத்திலேயே தான் வசிப்பார்கள். இதற்குக் குருகுலவாசம் என்று பெயர். குருவிடம் கல்வி கற்பதோடு, அவர் இட்ட பணிகளையெல்லாம் சீடர்கள் ஒழுங்காகச் செய்வார்கள். ரிஷிகளும் தங்களுக்குத் தெரிந்த கலைகள் அனைத்தையும் ஒளிவு மறைவின்றி, தகுதி பெற்ற மாணவர்களுக்குப் போதிப்பார்கள். குருவும் குருபத்தினியும் தந்தையும் தாயுமாகச் சீடப் பிள்ளைகளை அன்புடன் வளர்ப்பார்கள்.


ஒரு சிறுவனின் முன்னோர்கள் நல்லவர்களாகவும் அறிவாளிகளாகவும் வாழ்ந்தனரா என்பதைக்கொண்டே ரிஷிகள் அவனைச் சீடனாக அங்கீகரிப்பர். ஒருவனது கோத்திரத்தைக் கொண்டு அவனது மூதாதையின் பெருமையை அறிவார்கள். கோத்திரம் அறியாதவனின் மூதாதையைப் பற்றி அறிய முடியாதாகையால்அப்படிப்பட்டவனைக் குருகுலத்தில் சேர்க்க மாட்டார்கள்.

குருகுலவாசம் செய்து கல்வி கற்க விரும்பிய ஸத்தியகாமன் தன் அன்னை ஜாபாலாவிடம் ''என் கோத்திரம் என்ன அம்மா?'' என்று வினவினான்.

ஜாபாலா உடனே கண்ணீர் பெருக்கலானாள். ''குழந்தாய், என் சிறு வயதில் நம் வீட்டுக்குத் தினந்தோறும் அதிதிகள் வருவார்கள். உன் தகப்பனார் பலவிதமான பூஜைகள், சடங்குகள் முதலியவற்றைச் செய்து வந்தார். விருந்தாளிகளைக் கவனிப்பது, உன் தந்தைக்குப் பணிவிடை செய்வது இவற்றிலேயே என் பொழுது முழுவதும் சென்றது. ஓய்ச்சல் ஒழிவின்றிவேலை செய்து வந்த நான், உன் தகப்பனாரிடம் அதிகம் பேசக்கூட நேரம் இருந்ததில்லை. அவரிடமிருந்து கோத்திரத்தைத் தெரிந்து கொள்ளு முன்பே அவர் காலமாகி விட்டார். ஆகையால் உனக்குக் கோத்திரம் சொல்ல நான் அறிந்திருக்கவில்லை. எனவே உன் குருவிடம், 'நான் ஜாபாலாவின் பிள்ளையான ஸத்தியகாம ஜாபாலன்' என்று சொல். அவர் உன்னை ஏற்றுக் கொண்டால் ஏற்றுக்கொள்ளட்டும்'' என்றாள்.

ஹாரித்ருமதர் என்ற ரிஷியிடம் வந்தான் ஸத்தியகாமன். ''மகானாகிய தங்களிடம் குருகுலவாசம் செய்ய வந்திருக்கிறேன். என்னை ஏற்று அருளுங்கள்'' என்றான்.

''பணிவுள்ள சிறுவனே! உன் கோத்திரம் என்ன?'' என்று வினவினார் ஹாரித்ருமதர்.



''ஐயனே! எனது கோத்திரத்தை அறியேன். என் அன்னை பலவிதமான பணிகளில் ஈடுபட்டிருந்தபோது என்னைப் பெற்றாள். என் கோத்திரத்தை அவள் அறியவில்லை. அவள் பெயர் ஜாபாலா. அவளது பிள்ளையான நான் ஸத்தியகாம ஜாபாலன்'' என்று உள்ளது உள்ளபடி சொன்னான் ஸத்தியகாமன்.

கோத்திரம் தெரியாதவன் தீயோரின் மகனாகவும் இருக்கலாம் எனக் கருதி முனிவர்கள் அவர்களை ஏற்க மறுப்பதும் உண்டு. ஆனால் ஒளிவு மறைவின்றிப் பேசிய ஸத்தியகாமனின் தூய்மை ஹாரித்ருமதரின் உள்ளத்தை உருக்கியது.

''சௌம்யா! உன் முன்னோர்கள் உத்தமர்களாக இருந்ததால்தான் நீ இவ்வாறு உண்மையைத் தெளிவுடன் கூறினாய். உன்னை நான் நிராகரிக்க மாட்டேன். சமித்துக் கொண்டுவா. உனக்குப் பூணூல் போட்டுப் பிறகு உபதேசம் செய்கிறேன். நீ சத்தியத்திலிருந்து விலகாதவன் அல்லவா?'' என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினார் குரு.

ஸத்தியகாமன் என்றாலே உண்மையை விரும்புகிறவன் என்றுதான் பொருள். நம்முடைய ஸத்தியகாமனின் இயற்பெயரே அவனுக்குக் காரணப் பெயராகவும் இருந்தது.


மந்திரங்களைச் சொல்லித் தீயில் போடுகிற சுள்ளிகளுக்கு சமித்து என்று பெயர். ஸத்தியகாமன் குரு சொன்னவண்ணமே சமித்து சேகரித்து வந்தான். அவர் அவனுக்கு உபநயனம் செய்வித்தார்.

பிறகு தமது பலவீனமான பசுக்கள் நானூற்றையும் ஸத்யகாமனிடம் ஒப்புவித்து ''இவற்றை மேய்த்து வா'' என்றார்.

அரசர்களும் பிரபுக்களும் ரிஷிகளுக்குப் பசுக்களைத் தானம் செய்வார்கள். பால், நெய், இவற்றைக் கொண்டு, ரிஷிகள் உலக நலனுக்காக வேள்விகள் செய்வார்கள். இந்தப் பசுக்களைக் குருகுலவாசம் செய்யும் மாணவர்களே பராமரிப்பார்கள்.

ஸத்தியகாமன் தினந்தோறும் மாடுகளை மேய்ச்சல் காட்டி, குருவின் ஆசிரமத்துக்கு ஓட்டிவரவில்லை. அந்தப் பசுக்களைப் பலப்படுத்தி, அவை கன்றுகளைப் பெற்று, நானூறு பசுக்கள் ஆயிரமான பின்னரே ஆசிரமத்துக்குத் திரும்ப வேண்டும் என்று உறுதி கொண்டான். காட்டுக்குப் புறப்பட்டான், பசு மந்தையை ஓப்புக்கொண்டு.

அதன் பின் அப்பசுக்களை மேய்த்துக் காப்பதிலேயே ஒருமுகமாக ஈடுபட்டு விட்டான். வேறு நினைவின்றி இவ்விதம் உழைத்ததால் அவனுடைய அறிவில் மிகுந்த தெளிவு உண்டாயிற்று. தெளிந்த அறிவுடன் உலகில் எதை நோக்கினாலும் அவற்றிலிருந்து அரிய பாடங்களைப் பெற முடிந்தது. அதாவது குரு என்று ஒருவர் போதிக்காமல், தானாகவே, இறைவன் அருளில் பல



அரிய வித்தைகளை ஸத்தியகாமன் அறியலானான். தான் வளர்த்த பசுக்களிடமிருந்து போதனை பெற்றான்; தான் சமித்து இட்டு வளர்க்கும் அக்கினியிடமிருந்து போதனை பெற்றான்; ஹம்சம், நீர்க்கோழி ஆகிய காட்டுப் பட்சிகளிடமிருந்தும் போதனை பெற்றான்.

பசு மந்தை ஆயிரமானவுடன் குரு குலத்துக்குத் திரும்பினான்.

''ஸத்தியகாமா, வாவா!'' என்று அவனை அன்புடன் கூவி, மகிழ்ச்சி பொங்க வரவேற்றார் குரு.

''வந்தேன் ஐயனே!'' என்று கூறி அவரை வணங்கினான் ஸத்தியகாமன்.

''ஸௌம்யா! உன் முகத்திலேயே அறிவொளி வீசுகிறது. கடவுளின் தன்மையை அறிந்தவன் போல் காணப்படுகிறாய்! உனக்கு உபதேசித்தது யார்?'' என்று வினவினார் ஹாரித்ருமதர்.

''எனக்கு எந்த மனிதரும் உபதேசிக்கவில்லை'' என்று இரு பொருள் படக் கூறினான் ஸத்தியகாமன். அவன் உண்மையிலேயே விருப்ப முள்ளவன் தான். ஆயினும் சிறுவனாகிய தனக்குக் கண்டவிடமெல்லாம் கடவுளின் சக்தி தெரிந்ததாகவும், அதிலிருந்து உபதேசம் பெற்றதாகவும் கூறினால் அது அகந்தையைப்போல் தோன்றுமல்லவா? இதனால்தான் தனக்கு எந்த மனிதரும் உபதேசிக்கவில்லை என்று மட்டும் சொன்னான். அவனுக்கு உபதேசம் தந்த பசு, அக்கினி, ஹம்சம், நீர்க்கோழி ஆகியன மனிதர் அல்லவே! எனவே அவன் கூறியதிலும் உண்மை இருக்கத்தான் செய்தது!

இவ்விதம் ஏதோ சில உபதேசங்களைப் பெற்றாலும் விளக்கமாகத் தனக்கு அனைத்தையும் கூற வல்லவர் ஹாரித்ருமதரே என்று உணர்ந்தான் ஸத்தியகாமன்.

எனவே, ''தாங்களே எனக்கு ஆசை தீர உபதேசித்து அருள வேண்டும். குருவிடமிருந்து அறிந்த கல்வியே சிறந்த பயன் தரும் என்று தங்களைப் போன்ற பெரியோர்களிடம் கேட்டறிந்திருக்கிறேன்'' என்று வேண்டிக் கொண்டான் ஸத்தியகாமன்.

குரு அவனுக்கு உயர்ந்த கல்வியை மிச்சம் மீதி இல்லாமல் முழுவதும் உபதேசித்தார்.

நாளடைவில் ஸத்திய காமனும் ''ஜாபால ஸத்தியகாம முனிவர்'' என்று புகழ்கொண்ட மகானாக ஆனார். அப்போதும் அவர் தமது தாயை மறக்காமல், அவளது பெயரைத் தம் பெயரின் முன் சேர்த்து ''ஜாபாலர்'' என்றே பெயர் கொண்டார்! •


சிரிக்கச்
சிரிக்க...!
பையன்: அந்த முகம் வரைந்திருக்கிற பலூன் தான் எனக்கு வேணும்!
அம்மா: நாசமாப் போச்சு! அது இந்தப் பலூன் கடைக்காரரோட தலைடா மண்டு!
"என்னடா பையா இது?"
"எங்க பாலு தொடர்ந்து இருபத்தைந்து தடவை 'டக்' அடிச்சான். அதற்காக வெள்ளி விழாக் கொண்டாடுகிறோம்!"
அம்மா: யாருக்குடா கடிதம் எழுதறே?
பையன்: என் நண்பன் விலாசம்கூடக் கொடுக்காமல் ஊருக்குப் போய்விட்டான். அதைக் கேட்டு அவனுக்குக் கடிதம் எழுதறேன்!
பேரன்: தாத்தா! அந்தச் சிங்கம் உன்னைக் கூடச் சாப்பிட்டு விடுமோன்னேன்?
தாத்தா: நிச்சயம் சாப்பிட்டுடும்.
பேரன்: அப்படி ஏதாவது ஆச்சுன்னா நான் திரும்பி எத்தனாம் நம்பர் பஸ்ஸிலே வீட்டுக்குப் போகணும்?
"இன்னிக்கு வகுப்பிலே என்னடா பாடம்?"
"அதென்னமோ தெரியாது. அடுத்த வீட்டு மணி என்னை அம்மா செல்லம்னு கூப்பிட்டான். அதற்காக அவனுக்குச் சரியான பாடம் கத்துக் கொடுத்தேன்!"
சாமா

யூதர்களின் புனித பூமி

கிருஷ்ணவேணி



கிட்டுவும் பட்டுவும் அன்றையத் தினப் பத்திரிகையில் வந்துள்ள செய்தியைப் படித்துவிட்டு அப்படியே சிலையாக உட்கார்ந்து விட்டார்கள். அப்படி அவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கிய செய்தி என்ன தெரியுமா? இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்கும் ஏற்பட்டுள்ள போர் பற்றியதுதான். கொஞ்ச நாட்கள் . முன்புதான் பரமேசுவரத் தாத்தா அவர்களை யூதர்களின் தாய் நாடான இஸ்ரேலுக்கு அழைத்துப் போயிருந்தார். அங்கு யூதச் சிறுவனை யாகோவுடனும் அவன் சகோதரி ஸாராவுடனும் அளவளாவிய அந்த மகிழ்ச்சி நிறைந்த சந்திப்பை எண்ணிப் பார்த்தார்கள் கிட்டுவும் பட்டுவும். ''உழைப்பால் உயர்ந்த மக்களுக்குத்தான் எத்தனை இன்னல்கள்? பாவம், யாகோவும், ஸாராவும் இப்போது யுத்த களத்தில் பணியாற்றிக் கொண்டிருப்பார்கள்'' என்றான் கிட்டு.

''ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அவதிப்படும் ஓர் இன மக்களை இன்னமும் அமைதியாக வாழ விடமாட்டேன் என்கிறார்களே!'' என்று வேதனைப் பட்டுக் கொண்டாள் பட்டு. யாகோவ் இவர்களுக்கு அவர்களுடைய பண்டைய வரலாற்றை உள்ளம் நெகிழ விவரித்திருந்தான். அதெல்லாம் இப்போது நினைவுக்கு வந்தது. இன்றைய அரசியல் எப்படியும் இருக்கலாம். ஆனால் இஸ்ரேல் மக்கள் மிகவும் இன்னல்களுக்கு உள்ளான ஓர் இனத்தவர். பரமேசுவரத் தாத்தா அவர்களை கிறிஸ்துமஸ் தினத்தன்றுதான் இஸ்ரேலுக்கு அழைத்துப் போயிருந்தார்.

''ஏகபிரான் பிறந்த இடமான பெதல்ஹம் எங்கள் நாட்டில் இல்லை. அராபியர்களின் நாடான ஜோர்டானில் உள்ளது. ஆனாலும் எங்கள் எல்லைக்கு அருகில்தான் இருக்கிறது. உலகிலேயே மிக மிகப் பழைமையான மாதா கோவில் அதுதான். அன்னை மேரி பிரசவ வேதனையால் தவித்த போது தங்க இடமில்லாமல் ஒரு மாட்டுத் தொழுவத்தில் தங்கினாரே, அந்த இடத்தில் எழுப்பப்பட்ட மாதா கோயில் அது. துதி பாடுவோர் அமரும் இடத்தின் கீழே ஒரு மலைக் குகை வரை போகிறது. மெழுகுவத்திகளைக் கொளுத்திக் கொண்டுதான் அதனுள் இறங்க வேண்டும். அங்கு பதினைன்கு முனைகளைக் கொண்ட வெள்ளியினலான ஒரு நட்சத்திரம் இருக்கும். அதைச் சுற்றி லத்தீன் மொழியில் 'கன்னி மேரிக்கு இங்குதான் ஏகபிரான் பிறந்தார்' என்ற எழுத்துக்கள் எழுதப்பட்டிருக்கும்'' என்று விளக்கினாள் ஸாரா.

இதெல்லாம் கிட்டுவுக்கும் பட்டுவுக்கும் நினைவுக்கு வந்தன. ''ஏன் அண்ணா, ஜெரூஸலமும் கிறிஸ்துவர்களின் புனித இடம்தானே?'' என்று கேட்டாள் பட்டு.

''ஆமாம், அங்குதான் ஏகபிரானை அடக்கம் செய்த புராதனமான மாதா கோயில் உள்ளது. ஜெரூஸலத்தின் நடுவே இஸ்ரேல் அரபுநாடுகளின் எல்லை செல்கிறது. ஜெரூஸலம் முகமதியர்களுக்கும் புனிதமான இடம். ஆகவே இதைத் தங்களுடையதாக்கிக் கொள்ள இருவருமே அடிக்கடி மோதிக்கொள்ளுவது வழக்கமாகிவிட்டது. கடந்த போரில் இஸ்ரேல் ஜெரூஸலத்தைத் தனதாக்கிக் கொண்டுவிட்டது'' என்றான் கிட்டு.



'' இன்றைய இஸ்ரேல் ஓர் ஐக்கியக் குடியரசு இல்லையா ? யூதர்களான இஸ்ரேலியர் தங்களுடைய இந்த நாட்டைப் பெற இரண்டாயிரம் ஆண்டுகள் காத்துக் கிடந்ததாகக் கூறினன். இல்லையா யாகோவ்?'' என்ருள் பட்டு.

''பழைய கட்டளை என்ற — ஓல்டு டெஸ்டமெண்ட் — கிறிஸ்துவர்களின் சரித்திரத்தில் இந்த நாடு எப்படி உருவாயிற்று என்பதற்குக் கதை இருக்கிறது. கிறிஸ்து பிறப்பதற்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஆபிரஹாம் என்பவர் தம் குடும்பத்துடன் இங்கு தங்கினர். அதற்கு அப்போது கேனன் (Canan) என்று பெயர். பின்னல் இது பாலஸ்தீனம் என்று பெயர் பெற்றது. இப்போது இஸ்ரேல் என்று அழைக்கப்படுகிறது. கொடிய பஞ்சம் கேனன் மக்களை எகிப்துக்கு விரட்டியது. எகிப்திய மன்னர்கள் இஸ்ரேலியர்களைப் பல ஆண்டுகள் அடிமைகளாக மதித்துத் துன்புறுத்தினர்கள். கி.மு. 1500—ல் மோஸஸ் என்பவரின் தலைமையில் இவர்கள் விடுதலையடைந்து தாயகம் திரும்பினர்கள். ஸால், டேவிட், சாலமன் என்ற மூன்று புகழ் பெற்ற மன்னர்களின் ஆளுகையில் கேனன் செழிப்புற்று விளங்கியது. கடைசி மன்னரான சாலமன் ஜெருஸலத்தில் ஒரு புகழ்பெற்ற ஆலயத்தைக் கட்டினர். இவர்களுடைய ஆளுகையில் நாடு சுபிட்சமாகவும் சுதந்திரமாகவும் சமாதானத்துடன் விளங்கியது.

சாலமனின் மரணத்துக்குப் பிறகு கி. மு. 900 வாக்கில் நாடு இரண்டாகப் பிளவுபட்டது. வடக்குப் பகுதி ஸமாரியா எனவும் தென் பகுதி ஜுடா எனவும் பெயர் பெற்றது. இந்தக் காலத்தில்தான் இவ்விரு பகுதிகளையும் பாலஸ்தீனம் என்ற பெயரால் அழைக்கலானர்கள். பாலஸ்தீனம் பாபிலோனியர்கள், அஸிரியர்கள், பாரசீகர்கள், கிரேக்கர்கள், சிரியர்கள் ஆகியோரின் ஆதிக்கத்துக்கு மாறி மாறி ஆட்பட்டுக் கொண்டிருந்தது. கி. மு. 63ல் ரோமானியர்கள் இதைத் தங்களதாக்கிக் கொண்டார்கள்.

ஏகபிரான் இன்னும் அவதரிக்கவில்லை. யூதர்கள் ரோமானியர்களை அடிக்கடி எதிர்த்துக் கிளர்ச்சி செய்தார்கள். ஆனல் வெற்றி பெற முடியவில்லை. ரோமானியர்கள் ஜெருஸலம் நகரை நாசமாக்கினர்கள். சாலமன் கட்டிய ஆலயம் அழிக்கப்பட்டது. யூதர்கள், ஒன்று கொல்லப்பட்டார்கள் அல்லது விரட்டப்பட்டார்கள். விரட்டப்பட்டவர்கள் பாபிலோனிலும் ஐரோப்பாவிலும் தஞ்சம் புகுந்தார்கள்'' என்ருன் கிட்டு.

''அண்ணு! அன்று யாகோவ் கூறிய அவர்களுடைய பண்டைய சரித்திரத்தை அப்படியே நினைவில் வைத்திருக்கிருயே'' என்று ஆச்சரியப்பட்டுப் போனள் பட்டு. உடனே தன் ஞாபக சக்தியை வெளிப்படுத்தத் தாத்தா கூறிய சில விஷயங்களை அப்படியே, 'டேப்' போலக் கூறினள் பட்டு.

''யூதர்கள் உழைப்பாளிகள். அறிவாளிகள். எங்கு போனலும் வியாபாரம் செய்து பணக்காரர்களாகிவிடுவார்கள். ஆனல் யூதர்கள் கிறிஸ்தவர்களின் விரோதிகள் என்ற எண்ணம் எப்படியோ உருவாகிவிட்டது. ஐரோப்பிய மக்கள் யூதர்களை வெறுத்தார்கள். யூதர்கள் தங்கள் தாயகத்திலிருந்து விரட்டப்பட்டு மற்ற நாடுகளில் துன்பப்பட்டு வாழ்ந்தது போலவே அவர்கள் தாயகமான இஸ்ரேலும் கைமாறிக் கொண்டேதான் இருந்தது.

''1517லிருந்து 1914 வரை துருக்கியர்கள் சாம்ராஜ்யமான ஓட்டோமானின் ஒரு பகுதியாகவே இருந்தது. முதல் மகா யுத்தத்தில் துருக்கி, ஆஸ்திரியா ஜெர்மனி தேசங்களின் பக்கம் சேர்ந்து போரிட்டது—பிரிட்டன்,



ரஷியா, பிரான்ஸ் தேசங்களின் எதிரியாக. அப்போது பாலஸ்தீனம் முக்கிய யுத்தகளமாக விளங்கியது. பிரிட்டன் துருக்கியர்களை முறியடித்து ஓட்ட அராபியர்கள் பாலஸ்தீனத்தைத் தங்களதாக்கிக் கொண்டார்கள்.''

''பலே, பலே! நம்ம தாத்தாவின் குரலிலேயே அவர் போலவே அருமையாக 'மிமிக்ரி' செய்து விட்டாயே. உன் ஞாபக சக்திக்கும் ஒரு ஷொட்டுத் தர வேண்டியதுதான். அது சரி யாகோவ்வும் ஸாராவும் இன்றைய இஸ்ரேல் உருவான கதையைக் கூறினார்களே, நினைவிருக்கிறதா?'' என்று கேட்டான் கிட்டு.

''ஓ! மறந்துவிடக் கூடியதா அது? இதோ, கேட்டுக்கோ!'' என்று தொண்டையைக் கனைத்துக் கொண்டது பட்டு என்ற டேப் ரிகார்டு!

''பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் உலகிலுள்ள யூதர்களெல்லாம் தங்கள் தாயகத்தைத் திரும்பப் பெறுவதில் தீவிரமாக இருந்தார்கள். சிதறிக் கிடந்த யூதர்கள் பாலஸ்தீனத்துக்கு வந்து குவியலானார்கள். முதலில் அராபியர்கள் யூதர்களிடம் நேசமாகத்தான் இருந்தார்கள். பிரிட்டன் இரு இனத்தவரிடையேயும் மோதல் ஏற்படாமல் சமாதானமாக இருக்கப் பாலஸ்தீனத்தைத் தன் ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்தது. ஆனால் நாளாக ஆக நிலைமை மோசமாகவே ஐ. நா. சபை செயல்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. 1948ல் பாலஸ்தீனம் இஸ்ரேல் என்ற பெயரில் யூதர்களின் நாடாக அறிவிக்கப் பட்டது. அன்றிலிருந்தே கசப்பும் வளரலாயிற்று; யூதர்களுக்கான தனி நாடாக இஸ்ரேலை உருவாக்குவதற்கு அராபியர்களுக்கு விருப்பமில்லை. இஸ்ரேலியர் தங்கள் பழமையான தாய்நாட்டைத் திரும்பப் பெற்றதாக அவர்கள் கருதவில்லை. தங்கள் உடைமையிலிருந்து ஒரு பகுதியைப் பிடுங்கி மாற்றானுக்குக் கொடுத்து விட்டதாகத்தான் கருதினார்கள் அராபியர்கள். 1200 ஆண்டுகளாக அனுபவித்த சொத்தல்லவா? ஆசை யாரை விடும்?'' என்று முடித்த பட்டு, கிட்டுவைப் பார்த்து,'' என்ன சரியாக இருந்ததா? தாத்தா சொன்னதில் எதையும் விட்டுவிடவில்லையே?'' என்று கேட்டான்.

''நீதான் டேப் ரிகார்டராயிற்றே!'' என்றான் கிட்டு.

''கிட்டு நம் யாகோவையும் ஸாராவையும் சந்தித்தோமே, அதை இப்போது நினைத்தாலும் எத்தனை மகிழ்ச்சியாக மன நிறைவாக இருக்கிறது? அவர்களுடைய கிபுட்ஸுக்கு மறுபடியும் போக வேண்டும் போலிருக்கிறது. இஸ்ரேல் நாட்டில் விளையும் ஆரஞ்சுகளுக்குத்தான் எத்தனை ருசி?'' என்று கற்பனையில் தன்னை மறந்து போனான் பட்டு. கிட்டுவும் கண்களை மூடியபடியே அன்று கிபுட்ஸில் இஸ்ரேல் சிறுவர்களான யாகோவ், யுதா ஆகியவர்களுடன் ஊரெல்லாம் சுற்றிப் பார்த்த அந்தக் காட்சிகளில் லயித்துப் போய் விட்டான். அவர்கள் மனத் திரையில் அந்த நினைவுகள் திரைப்படமாக விரியலாயின.

''வியன்னாவில் வாழ்ந்து வந்தோம் நாங்கள். திடீரென்று ஒரு நாள் என் அப்பா வந்து தாம் நாடு மாறப் போவதாகச் சொன்னார். எங்கள் உடைமைகளையெல்லாம் விற்றுவிட்டுக் கப்பல் ஏறினோம். இஸ்ரேலில் முக்கிய துறைமுகமான ஹைஃபாவில் வந்து இறங்கினோம். நாங்கள் யூதர்கள். ஆகவே இனி எங்கள் தாயகம் இஸ்ரேல். நாங்கள் இங்கு வாழவே வந்திருக்கிறோம். இன்று வரை எங்களுக்கென்று ஒரு தனி நாடு — தாய் நாடு — இருக்கவில்லை. உலகெங்கிலுமுள்ள பல்வேறு நாடுகளில் சிதறிக் கிடந்தோம். இன்னும்கூடப் பலர் அப்படித்தான் இருக்கிறார்கள். பல்லாயிரம் யூதர்கள் இஸ்ரேலில் வாழ வந்து சேர்ந்தோம். இன்று இஸ்ரேலில் உள்ளவர்களில் பாதிப் பேர் வேறு நாடுகளில் பிறந்தவர்கள்தான், ஆஸ்திரியர்கள், போலந்துக்காரர்கள், ஜெர்மானியர்கள், கிரேக்கர்கள், அமெரிக்கர்கள் இப்படி உலகிலுள்ள பல்வேறு நாடுகளில் பிறந்த ஆண் பெண்கள் இன்று இஸ்ரேலியர்களாக, இஸ்ரேலின் பிரஜைகளாக வாழுகிறோம்'' என்றான், யாகோவ். கிட்டுவுடனும் பட்டுவுடனும் அவன் இப்படிப் பேசிக் கொண்டிருக்கும்போது சும்மா இல்லை. மலைப் பிரதேசத்தில் உள்ள ரஸ்தாவையே— அவன் கண்கள் துருவிக் கொண்டிருந்தன. அவனுடைய பெற்றோர் அறுவடைத் திருவிழாவான ஷவோட் (Shavuot) டில் கலந்து கொள்ள டெல் அவிவ்விலிருந்து வருகிறார்கள். அவர்களை எதிர்பார்த்துக் கொண்டு ரஸ்தாவின் ஓரமாகக் காத்திருந்தான் யாகோவ். அப்போதுதான் கிட்டுவும் பட்டுவும் பரமேசுவரத் தாத்தாவும்— அவனைத் திடுமென்று போய்ச் சந்தித்தார்கள்.

(அடுத்த இதழில் முடியும்)

முட்டாள் பேய்கள்

கே. கே. மூர்த்தி

ரஷ்யாவிலுள்ள பைன் காடுகளில் மரங்களை வெட்டிப் பிழைப்பு நடத்தி வந்தவர்களுள் விளாடிமீரும் ஒருவன். அவன் மரம் வெட்ட ஒரு நாள் சென்றிருக்கையில் ஓர் உயர்ந்த மரத்தில் தேன் கூடு கட்டியிருப்பதைக் கண்டான். ஆனால் அவனிடத்தில் கயிறு எதுவும் இல்லை. கயிறு இருந்தால் உயரே ஏறித் தேனை எடுக்கலாம். மரத்தை வெட்டலாமென்றாலோ அவன் களைத்துக் காணப்பட்டான். எனவே, மறு நாள் அதை எடுப்பதென முடிவு செய்து கொண்டான். எவ்வளவு நீளம் கயிறு தேவை எனக் கணக்கிட்டான். பக்கத்திலிருந்த குளத்தில் நீர் குடித்துவிட்டு வீடு சென்றான்.

மறு நாள் காலை விடிவதற்குள் தான் அங்கு போய்விட வேண்டுமெனத் தீர்மானித்தான். மேலும் அவனிடம் அவ்வளவுநீளமான கயிறு இல்லை. மற்றவர்களிடம் கேட்டால் ஏன், எதற்கு. என்று கேள்விகள் கேட்பார்கள். எனவே, தானே கயிற்றைத் திரித்துத் தயாரிப்பதென முடிவு செய்தான்.

மறுநாள் அதிகாலையிலேயே அங்கு வந்து உட்கார்ந்து கொண்டு தேவையான கயிற்றைத் திரிக்க ஆரம்பித்தான். பக்கத்திலிருந்த குளத்தில் ஒரு பேய் தனது தாயுடன் வசித்து வந்தது. அந்தப் பேய்க்குச் சொந்த புத்தியே கிடையாது. எதையும் அம்மாவையே கேட்டுக் கொண்டு செய்யும். அம்மாப் பேய்க்கோ சிந்திக்கும் திறன் கிடையாது. சின்னப்பேய்எங்காவது வெளியில் சுற்றிவிட்டு வரலாம் எனக் குளத்திலிருந்து வெளியில் வந்தது. அங்கு விளாடிமீர் கயிறு பின்னிக் கொண்டிருப்பதை அது கண்டது. விளாடிமீரும் அதைப் பார்த்துவிட்டான். அவனுக்கு உள்ளுக்குள் பயம். ஆனால் 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்று சொல்வார்களே, அது போன்று அந்தப் பேய் ஒரு முட்டாள் பேய் என்று தெரிந்து கொண்டான். ஆனாலும் தனது மூர்க்கத்தனத்தால் ஏதாவது செய்து விடுமோ எனப் பயந்தான். அதனுடன் சாமர்த்தியமாகப் பேசிச் சமாளிப்பதென நினைத்துக் கொண்டான். பேய்தான் முதலில்பேசஆரம்பித்தது.

''இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறாய்?'' என்று அது கேட்டது.





அவன், ''கயிறு பின்னிக் கொண்டிருக்கிறேன்'' என்றான்.

''எதற்கு?'' எனக் கேட்டது. தேனை எடுக்க என்று சொன்னால் அது தேனை எடுத்துக் கொண்டு விடுமோ என நினைத்து, ''இக்குளத்தைக் கட்டிக் கொண்டு போவதற்காக'' என்றான். விளாடிமீர். பேய் பயந்துவிட்டது. அதற்குத்தான் சுய அறிவு கிடையாதே. எனவே குளத்துக்குள் இருந்த தன் அம்மாவிடம் ஓடியது. அவன் குளத்தைக் கட்டிக் கொண்டு போய்விட்டால் நாம் எங்கு குடி இருப்பது என்று கேட்டது. அம்மாப் பேயும் பயந்து சிந்திக்காமல், ''அவனுடன் ஏதாவது போட்டிப் பந்தயம் வைத்துக் கொள். அதில் அவன் ஜெயித்தால் குளம் அவனுக்கு; இல்லையேல் நமக்கு'' என்றது.

பேய் விளாடிமீரிடம் வந்து 'போட்டிப் பந்தயத்துக்கு வருகிறாயா?' எனக் கேட்டது. அவனும் ஒப்புக் கொண்டான். மூன்று போட்டிகளுக்கு ஏற்பாடாயிற்று. 'நாளைக்குப் போட்டியை வைத்துக் கொள்வோம்' எனக் கூறிவிட்டு விளாடிமீர் சென்றான்.

விளாடிமீர் மறு நாள் வந்தான். கையில் ஒரு துப்பாக்கியையும் எடுத்து வந்தான். முதலில் சப்தமிடும் போட்டி. 'ஒரு மரத்தில் ஏறி உட்கார்ந்து சப்தமிடுவோம்' என்றது பேய். சரி என்று கூறிப் பக்கத்திலிருந்த ஒரு பைன் மரத்தில் ஏறித் தன்னைக் கயிற்றினால் கட்டிக் கொண்டான். முதலில் பேய் சப்தமிட்டது. காதைக் கிழித்துவிடும்போலிருந்தது அந்தச் சப்தம். பிறகு இவனைச் சப்தமிடச் செய்தது. இவன் உடனே துப்பாக்கியை எடுத்து உயரே சுட்டான். அது அந்தக் காடு முழுவதும் எதிரொலித்தது. பேயும் நடுங்கித் தான் உட்கார்ந்திருந்த மரத்திலிருந்து விழுந்து விட்டது. அடுத்து ஓட்டப் பந்தயத்துக்காக அவன் அதனிடம், ''காட்டிலிருக்கும் என் தம்பியான முயலை முதலில் வென்றுவா. பிறகு நான் உன்னோடு போட்டி யிடுகிறேன். இல்லாவிடில் குளம் எனக்கு'' என்றான். வேறு வழியில்லாமல் அதுவும் காட்டுக்குள் சென்று முயலைப் போட்டிக்குக் கூப்பிட்டது. முயல் பேயின் குரலைக் கேட்டவுடனேயே பயந்து வெகுவேகமாக ஓடிக் காட்டினுள் மறைந்தது. பேயோ, ''நாம் போட்டிக்குக் கூப்பிட்டவுடனேயே வெகுதூரம் சென்றுவிட்டதே. நாம் எப்படி அதனை வெல்ல முடியும்? தம்பியே இவ்வளவு வேகம் என்றால் அண்ணன் எவ்வளவு வேகம் ஓடுவானோ'' என்று எண்ணித் திரும்பி வந்து தன் தோல்வியை ஒப்புக் கொண்டது. அடுத்தாற்போல் மல்யுத்தச் சண்டைக்கு அவன் பேயிடம், ''இரண்டில் நான் வென்றுவிட்டேன். மூன்றாவதற்கு நீ மீண்டும் காட்டுக்குள் சென்று எனது தாத்தாவான கரடியை வென்றுவா. இல்லையேல்.....'' என்றான். உடனே பேய் 'இதோ' என்று ஓடியது. அங்கு ஒரு கரடி ஒரு மரத்தில் தேன் குடித்தவாறு இதற்கு முதுகைக் காட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தது. பேய் சண்டைக்குக் கூப்பிட்டவுடன் தான் தேன் குடிப்பதற்குத் தடையாக வந்ததற்காக ஆத்திரத்துடன் திரும்பி அதை நோக்கி தன் பல்லைக் காட்டி உறுமியது. அதனுடைய பல்லின் கூர்மையைக் கண்ட சின்னப் பேய் பயந்து விட்டது. தொங்கிய முகத்துடன் விளாடிமீரிடம் தனது தோல்வியை ஒப்புக் கொண்டு தனது தாயிடம் வந்து, ''அவனுடைய தம்பியும், தாத்தாவுமே என்னை வென்று விட்டார்கள்'' என்றது. தாய்ப் பேய், ''அவனிடம் போய்ப் பிச்சை கேள்'' என்றது.

சின்னப் பேய் இவனிடம் வந்து, ''உனக்கு என்ன வேண்டுமோ கேள் தருகிறேன். ஆனால் இந்த இடத்தை மட்டும் எங்களுக்குத் தந்துவிடு'' எனக் கெஞ்சியது. அவனும் சரி என ஒப்புக் கொண்டு, தனது தொப்பியை எடுத்து 'இது நிரம்பும் அளவுக்கான தங்க நாணயங்கள் கொண்டுவா' என்றான். சரி என்று கூறி உள்ளே சென்றது. அது திரும்புவதற்குள் இவன் தொப்பியில் ஒரு துவாரம் செய்தான். கீழே ஒரு குழி தோண்டி அதன்மீது குழி தோண்டியது தெரியாதவாறு தொப்பியை வைத்தான். பேய் கொஞ்சம் தங்க நாணயங்களுடன் வந்தது. தொப்பிக்குள் கொட்டியது. ஆனால் அது நிரம்பவில்லை. எப்படி நிரம்பும்? தொப்பியும் ஓட்டை. கீழே பூமியிலும் பள்ளம். எல்லாம் அதனுள் போய் விழுந்து விட்டது. மூட்டை மூட்டையாக நாணயங்களைக் கொண்டு வந்து கொட்டியது பேய். கடைசியாக ஒரு வழியாகத் தொப்பியும் நிறைந்தது. ''சரி! இப்பொழுது என்னையும், இந்த மூட்டைகளையும் சுமந்து கொண்டு என்னை எனது இருப்பிடத்தில் விட்டு விட்டுத் திரும்பிப் பார்க்காமல் வரவேண்டும்'' என்றான். பாவம்! சரி எனத் தலையாட்டி விட்டு அவன் சொன்னவாறு செய்து விட்டுத் தனக்கும், தன் தாய்க்கும் தங்க இடம் கிடைத்ததே என மகிழ்ச்சியோடு திரும்பி வந்தது, அந்த முட்டாள் பேய்! விளாடிமீர் மிக்க மகிழ்ச்சியோடு தனது வாழ்க்கையைத் தொடர ஆரம்பித்தான்.

கூட்டுறவுச் சங்கங்கள்

நியாயமான விலையில் தரமான பொருள்களைத் தட்டுப்பாடுள்ள காலத்திலும் பெறவேண்டுமானால் நம் நினைவுக்கு வருவது எது? 'கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ்' - கூட்டுறவுப் பண்டகசாலை தானே? இப்படி ஓர் அமைப்பு யாரால் எப்போது எப்படி உண்டாக்கப்பட்டது என்று தெரிந்து கொள்ள வேண்டாமா? முதல் கோவாபரேடிவ் இயக்கத்தைத் தோற்றுவித்தவரின் பெயர், '**வில்லியம் கூப்பர்**' என்பது.

வில்லியம் கூப்பர் வடக்கு இங்கிலாந்திலுள்ள ரோச்டேல் என்ற சின்ன ஊரில் வாழ்ந்து வந்தார். அவர் ஃபிளானல் நெசவாலை ஒன்றில் வேலை செய்து வந்தார். அவர் வேலை செய்த தொழிற்சாலையில் தயாரான ஃப்ளானல்கள் உலகெங்கும் விற்பனைக்குப் போயிற்று. சட்டைகளாகவும் உள்ளாடைகளாகவும் ஃபிளானல் பொருள்களை மக்கள் வசதியுள்ளபோது தான் வாங்குவார்கள். வசதிக் குறைவு ஏற்படும்போது யாரும் அதை அணுக மாட்டார்கள்.

1834ல் நெருக்கடி நிலை ஏற்பட்டது. மக்களின் வாழ்க்கை வசதி வெகுவாகப் பாதிக்கப்பட்டது. ஃப்ளானல் தொழில் படுத்துவிட்டது. உற்பத்தியாளர்கள் தொழிலாளர்களின் கூலிகளைக் குறைத்தார்கள். வில்லியம் கூப்பரும் அவர் நண்பர்களும் இது முறையல்ல என்று வாதாடினார்கள். பலன் இல்லை. ஆகவே வேலை செய்ய மறுத்தார்கள். வேலை நிறுத்தம் தொடர்ந்தது. இந்தக் காலத்தைப் போல அப்போது தொழிற் சங்கங்கள் ஏற்படவில்லை. ஆகவே வேலை இல்லாதபோது வாழ வசதி வேண்டாமா?

இப்படி வேலை இல்லாமல், பசிக்கு உணவு தேட வகையுமில்லாமல் அவதிப்பட்ட நாட்களில் கூப்பர் தம் நண்பர்களுடன் கலந்து யோசித்தார். இந்த இக்கட்டிலிருந்து விடுதலை பெறுவது எப்படி என்று சிந்தித்தார்கள். வில்லியமும் நண்பர்களும் சேர்ந்து ஒரு கடையை ஆரம்பிப்பது என்று முடிவு செய்தார்கள். அந்தக் கடையில் உணவுப் பொருள்கள் மலிவாகக் கிடைக்க வழி ஏற்படும் என்று நம்பினார்கள். 1844ம் ஆண்டு கிறிஸ்துமஸுக்கு முன்பாகக் கடையை ஆரம்பித்துவிட வேண்டும் என்று திட்டமிட்டார்கள். அவர்கள் திட்டமிட்டுள்ள கடை மற்றக் கடைகளிலிருந்து மாறுபட்டது. எப்படி? கடை அதை நடத்துபவர்களுக்குச் சொந்தமானதல்ல. அங்கு பொருள்களை வாங்க வரும் எல்லாருக்குமே உரிமையானது. அது அந்தக் காலத்தில் ஒரு புதுமை. இதுவே 'கோவாபரேடிவ் ஷாப்' என்று பெயர் பெற்றது. உலகின் முதல்' 'கோ.ஆப்' இதுதான்.

இந்தக் கடை ஒரு கிளப் (சங்கம்) போலவே இருந்தது. இதன் அங்கத்தினர் ஒவ்வொருவரும் இந்தக் கடை தொடர்ந்து இயங்கக் கொஞ்சம் கொஞ்சம் பணம் முதலீடு செய்திருந்தார்கள். லாபத்தை எல்லாரும் பங்கிட்டுக் கொள்வதென்று ஏற்பாடு. ஒவ்வொரு



வருக்கும் அந்தக் கடையை எப்படி நடத்த வேண்டும் என்று யோசனைகள் கூறும் உரிமையும் உண்டு.

உலகின் முதல் கூட்டுறவு முறைக் கடை தொடங்கியது இப்படித்தான். 'கோ – ஆப்'பை உருவாக்கிய வில்லியம் கூப்பர் இளம் வயதிலேயே திடீரென்று இறந்து போனார். ஆனால் அவர் இறப்பதற்கு முன்பாக 'கோ ஆப்' கடைகள் ரீச்டேலிலிருந்து இங்கிலாந்து முழுவதும் பரவிவிட்டது. வேறு நாடுகளிலும்கூட இதன் பலனை அறிந்து இதே போல் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவலானார்கள்.

— **விகேயெம்**

தெரியுமா?

851. ஆர்க்டிக் பகுதிகளில் பனிச் சறுக்கு வண்டிகளான ஸ்லெட்ஜ்களை இழுப்பதற்கு இரு வகை நாய்களைப் பயன்படுத்துகிறார்கள். அந்த இன நாய்கள் எவை தெரியுமா ?

852. பிரான்ஸிலுள்ள வெர்சைல்ஸ் அரண்மனை எந்த மன்னரால் கட்டப் பட்டது ?

853. டீஸல், மின்விசைகளால் ஓடும் அளவுக்கு முன்னேற்றம் அடைந்துள்ளன ரயில்வேக்கள். இருந்தாலும் இங்கிலாந் தில் ஒரு மாகாணத்தில் நீராவி யந்திரப் பிரியர்களுக்காக 'புளூ பெல் லைன்' என்ற பெயரில் ஓர் இருப்புப் பாதை யில் நீராவியால் இயங்கும் ரயில் ஓடு கிறது. அது எந்த மாகாணம் ?

854. மேலைநாட்டு இதிகாசங்களில் ஒரு மிருகம் விவரிக்கப்படுகிறது. அது குதிரையைப் போல் இருக்கும். அதன் நெற்றியில் ஒற்றைக் கொம்பிருக்கும். அம்மிருகத்தின் பெயர் தெரியுமா ?

855. ராணுவத்தினருக்கு வழங்கப் படும் கௌரவம் மிக்க ஒரு பதக்கத் துக்கு இரும்புச் சிலுவை (ஐயர்ன் கிராஸ்) என்று பெயர். இதைக் கொடுப்பது எந்த நாடு தெரியுமா ?

856. யாஷ்மாக் என்பது — எருது இனத்தைச் சேர்ந்த ஒரு பிராணி, துருக்கியர்களின் உணவு வகை, முஸ்லிம் மாதர்கள் அணியும் முகத் திரை—இவை களில் எது சரி ?

857. ஐஸ் ஹாக்கி ஆட்டம் எந்த நாட்டிலிருந்து தோன்றியது ?

858. இந்த வாத்தியத்துக்கு என்ன பெயர் தெரியுமா ?



859. புண்ட் (Punt) என்றால் — சம தளமுடைய அடிப் பாகத்தைக் கொண்ட படகு, ஒரு வகைத் தொப்பி, ஒரு வகை நாற்காலி—இவைகளில் எது சரி ?

860. 'ஓல்டு ஏஜ் பென்ஷன்' முறை பிரிட்டனில் எந்த ஆண்டு கொண்டு வரப்பட்டது ?

861. 'மகாராஜாவின் புதிய ஆடை' என்ற குழந்தைகள் கதையை எழுதியது யார் ?

862. வோல்கா நதி பாயும் நாடு எது?

863. நோவாவின் படகு கட்டப் பட்டது - ஓக் மரத்தில், கோஃபர் மரத் தில், ஆலமரத்தில் — இதில் எது சரி ?

864. புராதன எகிப்தியர் பாபிரஸ் மரத்தின் எந்தப் பகுதியைப் பாடம் செய்து பக்குவப்படுத்தி எழுதும் சாதன மாக்கினார்கள் ?

865. நார்மானியர்கள் இங்கி லாந்தை வெற்றி கொண்டது எந்த நூற்றாண்டில் ?

866. இங்கிலாந்தில் கௌண்ட்ரிபார்க் குக்குப் போனால் நீங்கள் காணும் ஆட்டம் — ஷோ ஜம்பிங், போலோ, கால்ஃப் இம்மூன்றில் எது ?

867. 1851ம் ஆண்டில் மிகப் பெரிய ஒரு கண்காட்சிக்காக ஒரு பிரும் மாண்டமான அரண்மனையையே இங்கி லாந்தில் நிர்மாணித்தார்கள். அதற்கு என்ன பெயர் தெரியுமா ?

868. பெர்ஸிபோலிஸ் (Persepolis) என்பது எந்தப் புராதன சாம்ராஜ் யத்தின் தலைநகராக இருந்தது?

869. டிஜான் (Dijan) என்ற நகரம் எந்தத் தேசத்தில் உள்ளது ?

870. செவாஸ்டோபோல் (Sevastopol) துறைமுகம் எந்தக் கடலில் உள்ளது ?

871. தோழமைத் தீவுகள் (ஃபிரண் ட்லி ஐலண்ட்ஸ்)க்கு இன்னொரு பெயர் உண்டு. அது என்ன?

872. உலகை முதன் முதலில் கடல் மூலம் சுற்றி வந்த முதல் ஆங்கிலேயர் யார் ?

873. ஒரு கடல் வாழ் ஜீவனை, ஓட்ட மில்லாமல் தேங்கிக் கிடக்கும் நீரில் போட்டால் அது தன் உள் உடல் உறுப்புக்கள் வெளிப்புற மாகும்படி மாறிவிடும். அக்கடல் வாழ் ஜந்துவின் பெயர் என்ன?

874. எலி கதீட்ரல் (Ely Cathedral) இங்கிலாந்தின் எந்த மாகாணத்தில் உள்ளது ?

தெரியுமே!

விடைகள்: 851. ஸமோய்டு என்பது ஒரு வகை ஹஸ்கி என்பது மற்றது. 852. பதின்மூன்றாம் லூயி மன்னனால். 853. ஸஸெக்ஸ் மாகாணத்தில். 854. யூனிகார்ன். 855. ஜெர்மனி. 856. முஸ்லிம் மாதர் அணியும் முகத் திரை. 857. கானடாவிலிருந்து. 858. பாலலைகாஸ். 859. சமதளமுடைய அடிப்பாகத்தைக் கொண்ட படகு. 860. 1908ல். 861. ஹான்ஸ் ஆண்டர்சன். 862. ரஷ்யா. 863. கோஃபர் மரத்தில். 864. தண்டுப் பகுதியை. 865. பதினொன்றாம் நூற்றாண்டில். 866. போலோ. 867. ஸ்படிக அரண்மனை (கிரிஸ்டல் பாலஸ்) 868. பாரசீகத்தின். 869. பிரான்ஸ் தேசத்தில். 870. கருங் கடலில். 871. டோங்கா. 872. சர் பிரான்ஸிஸ் டிரேக். 873. கடல் வெள்ளரிக்காய். (கடல் குக்கும்பர்) 874. கேம்பிரிட்ஜ் ஷயரில்.


அக்கா! ஜெம்ஸினால் விளையாடியது போதும்...
இனி அதைத் தின்போமே!
GEMS
Cadbury's Milk Chocolate
GEMS
ஆம்! ஜெம்ஸ் என்றாலே குழந்தைகளுக்கு
ஒரு அலாதியான பிரியம்!
பற்பல வண்ணங்களில் இனிமையும் சுவையுமிக்க
முரமுரப்பான மில்க் சாக்கலேட் — ஜெம்ஸ்!
ஆட்டமும் பாட்டமும் களிப்பூட்டுமே,
காட்பரீஸ் ஜெம்ஸ் இனிப்பூட்டுமே!
AIYARS-C. 285 TM



'கோகுல'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக ஆர். அனந்தநாராயணனால் அச்சிட்டு வெளியிடப்பட்டது. ● ஆசிரியர்: சதாசிவம்

பள்ளிக்குப் போகும்போதும்
வரும்போதும்
பள்ளியிலும்



நியூட்ரின் மிட்டாய்களில் ஒரு முழுமையான
புதிய சுவைகள் நிறைந்த இனிய உலகத்தை
அவர்கள் காண்கிறார்கள். வாயில் நீர் ஊறச்
செய்து இன்பமூட்டும் கோகோனட்
பான் பான்கள், காபி டாபிகள், ஆரஞ்சு
காண்டிகள், லாக்டோ பான் பான்கள்
பால், தேன், மால்ட் சர்க்கரைச் சத்து
நிறைந்தவை. அவைகள் மிட்டாய்கள்
மட்டுமல்ல; அதனினும் மேலானவை.
அதி அற்புத நியூட்ரின் உலகினிற்கு
உங்கள் குழந்தைகளையும் அறிமுகம்
செய்யுங்கள்.

குழந்தைகள் பேசுவதெல்லாம் நியூட்ரினைப் பற்றியே

நியூட்ரின்

தின்னத் தின்ன திகட்டாத மிட்டாய்

nutrine

நியூட்ரின் கன்பெக்ஷனரி கம்பெனி பிரைவேட் லிமிடெட், பலமனேர் ரோடு, சித்தூர். (ஆ.பி.)

"'ஜாக்கிரதையாகக் கையாளவும்' என்று எழுதட்டுமா?"

"அவசியமில்லை. ஸதர்ன் ரோட்வேஸில்தானே அனுப்பப் போகிறோம்?"

பிரதி வருடமும் பல லட்சம் டன் எடையுள்ள பார்ஸல்களை ஸதர்ன் ரோட்வேஸ் சுமந்து சென்று சேர்க்கிறது. பார்ஸல்களை அது ஜாக்கிரதையாகக் கையாள்கிறது. ஒவ்வொருவரையும் தனி அக்கறையுடன் கவனித்து சேவை செய்கிறது. இதனாலெல்லாம்தான் அதனிடம் வாடிக்கையாளர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. பார்ஸல்களை ஏற்றுவது, எடுத்துச் செல்வது, இறக்குவது அனைத்தையும் விசேஷப் பயிற்சி பெற்ற ஊழியர்களே செய்கிறார்கள்.

ஆகவே உங்கள் பார்ஸல்களை ஸதர்ன் ரோட்வேஸ் நல்லபடியாகவும் பத்திரமாகவும் கொண்டுபோய்ச் சேர்ப்பதில் வியப்பில்லை.

வாடிக்கையாளர்களிடை வளர்ந்து வரும் நல்லெண்ணமும் நம்பிக்கையும்தான் தென்னகம்பூராவையும் தன் பார்ஸல் ஸர்வீஸினால் ஸதர்ன் ரோட்வேஸ் அரவணைக்கத் துணை புரிந்துள்ளது. தங்கள் பண்டங்களை அனுப்புவதற்கு மேன் மேலும் அதிக மக்கள் ஸதர்ன் ரோட்வேஸைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.



ஸதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிமிடெட்

டிவிஎஸ் தொகுப்பைச் சேர்ந்த நிறுவனங்களில் ஒன்று

மதுரை

